விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2037 | தை 14 வெள்ளிக்கிழமை (27..01.2006) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 39

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# அமைதிப் பேச்சுக்கு இணக்கம்

# சர்வதேச சமூகம் வரவேற்பு !

## சொல்ஹெய்மிற்கு பாராட்டு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளதை சர்வதேச சமூகம் வரவேற்றுள்ளது.

தடைப்பட்டுப் போயிருந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாவதையிட்டு தாம் மகிழ்வடைவதாகவும் அம் முயற்சிகளுக்கு அனுசரணையாளராக செயற்படும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மிற்கு தாம் பாராட்டுத் தெரிவிப்பதாகவும் சர்வதேச சமூகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து யப்பான், அமெரிக்கா மற்றும் இந்திய அரசாங்கங்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப்புலிகளால் நேற்று விடுதலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் தனது வீட்டிற்கு புறப்படுவதற்கு தயார் நிலையில் உள்ளபோது...

## இராணுவத் தாக்குதலில் போராளி வீரச்சாவு

### விடுதலைப்புலிகள் கடும் கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு -பொலநறுவை வடமுனை எல்லையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னணிக் காவல் நிலை மீது இராணுவ உதவியுடன் துணை ஆயுதக்குழுவினரால் நடாத்தப்பட்ட ஊடுருவித் தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமது முன்னணிக் காவலரண் பகுதியில் வழமைபோல் காலை நேர கண்காணிப்பில் போராளிகள் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மோட்டார்க் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் போராளி மேஜர் கபிலன் வீரச்சாவடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலையடுத்த விடுதலைப்புலிகளும் பதில் தாக்குதலை நடத்தினர். இப் பதில் தாக்குதலில் இருந்து இராணுவத்தினரையும் துணைப்படையையும் விடுவிக்க வெலிகந்த இராணுவ முகாமில் இருந்து செல்தாக்குதல் விடுதலைப் புலிகளின் நிர்வாகப்பகுதியை நோக்கி நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக இலங்கைப்போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யுத்த நிறுத்த அமுலாக்க பேச்சுக்களுக்கு விடுதலைப்புலிகள் இணங்கி 24 மணிநேரத்திற்குள் விடுதலைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இன்று பூரண ஹர்த்தால்

(வவுனியா)

அண்மைக்காலமாக இடம் பெற்றுவரும் மனிதப் படுகொலைகளைக் கண்டித்து வவுனியாவில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இக் ஹர்த்தாலுக்கு வவுனியா தமிழ் மாணவர் ஒன்றியம், வவுனியா பொது அமைப்புக்கள் ,பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். பொதுமக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளையும் மனிதப்படுகொலைகளையும் கண்டிப்பதோடு எதிர்வரும் காலப்பகுதியில் அது போன்ற வன்முறைகள் இடம்பெறக் கூடாது என அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் உணர்த்தும் வகையில் இக் ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுப்பதாக வவுனியா தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-39)

## ஜெனீவாவில் பேசுவதற்கு சுவிஸ் அரசு வரவேற்பு !

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையேயான அமைதிப்பேச்சுக்களை சுவிஸின் ஜெனீவாவில் நடத்தப்படுவதை சுவிஸ் அரசாங்கம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக சுவிஸ் தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த ஒப்பந்தப் பேச்சுக்களை சுவிஸில் நடத்த ஒப்புக்கொண்டுள்ளன.

இந்த முடிபை சுவிஸ் அரசாங்கம் வரவேற்கிறது. தற்போது பிரச்சினைகள் மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்கான ஒரு வாய்ப்பாக இந்த முடிபு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளை சுவிஸ் அரசாங்கம் ஆதரிக்கிறது. ஆதலால் தான் சுவிஸ் நாட்டில் பேச்சுக்களை நடத்தலாம் என்று நோர்வே தானாகவே அறிவித்தது.

அமைதி முயற்சிகளில் சுவிஸ் அரசாங்கம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திப்பணிகள் இலங்கையில் மேற்கொள்ளப்படவும் இது நல்ல சந்தர்ப்பம் என்று சுவிஸ் அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அமைதிப் பேச்சுக்களில் வெற்றிபெற பொறுமைகாத்தல் அவசியமானது

### எரிக்சொல்ஹெய்ம் வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கை அமைதிப் பேச்சுக்களில் வெற்றி பெறுவதற்கு இரு தரப்பினரும் பொறுமை காத்தல் அவசியமானது என இலங்கைக்கான சிறப்புத் தூதுவரும் நேர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அமைதிப்பேச்சுக்கள் மீண்டும் தொடங்கிவிட்டன. இருப் பினும் இந்த முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு முக்கியமானது பொறுமையாக இருத்தல் என்பதுதான்.

1998 ஆம் ஆண்டு இந்த அமைதி முயற்சிகளை முழுநேரப் பணியாகத் தொடங்கும் போது 6 மாத காலங்களில் முடிந்துவிடும் என்றுதான் கருதினேன். ஆனால் 8 ஆண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அழுதால் உன்னைப் பெறலாமோ?

திருவாதவூரட்டிகள் சிவபெரு மானிடத்தில், 'அழுதால் உன்



னைப் பெறலாமோ?' என்று வினாவுகின்றார் அடிகளார்,

கொம்பர் இல் லாக்கொடி போல் அல மந்தனன் கோமளே
வெம்புகின்றேன்-
பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரி
யப்புலன் தீக்கதுவ வெதும்புறு வேன் 'நின்னைச் சிரிப்பிப்பன் வெங்கரியின் உரிப்பிச்சன், தோலுடைப் பிச்சன், நஞ்சூண் பிச்சன் ஊர்ச்சுடு காட்டு எரிப்பிச் சன் என்னையும் ஆளுடைப் பிச் சன் என்று ஏசுவனே-'

என்று எல்லாம் கெஞ்சு மட் டும் கெஞ்சிப் பார்த்தார். மிஞ்சு மட்டும் மிஞ்சிப் பார்த்தார். சடைய வர் கடையவருக்கு விடை அருள வில்லை. தமது வினைத் தடையே சிவபிரான் இரங்காமைக்குக் காரணம் என்று கண்டு கொண் டார். தமது வினைத் தடையை வெல்வது எவ்வாறு என்று சிந்தித் தார்.

வினைத்தளையை வெட்டவும் சிவ அன்பைப் பெறவும் அழுகை ஒன்றே சிறந்த வழி எனக்கண் டார். அழுகை ஒன்றால் மழ இளங் குழவி தன் குறையைத் தீர்ப்பது கண்முன் காணும் காட்சி அன்றோ?

அடிகளாரும் திருவருள் சேர அழுகையையே பலத்த ஆயுத மாகப் பாவித்தார். அழுகையைத் தொடங்கும் முன்புதமது குறையை

தேனும் அமிழ்த்தமும் கரும்பின் பிழிந்த சாறுமான மெய்ப்பொருள்.

அடியேன் அயலே மயங் கொண்டபூகேனே

**சிவசண்முகவடிவேல்**

அழகேன் நின்பால்
உனைப் பிரிந்து வருந்துவேன்
அழுமதுவே யன்றி மற்றென் செய்கேன்
பொன்னம்பலத் தரைசே

## வெள்ளிநற்சிந்தனை

இறைவனிடத்தில் முறை செய்கின் றார். அது அடிகளாருடைய பெருந் தன்மை.

'யான் பொய்யன்த என் நெஞ் சும் வஞ்சனைமிக்கது. என் அன் பும் மெய்யல்ல. நானுமோ-வினை யிலே கிடந்து அழுந்துவேன். இந் நிலையில் நான் வருந்தி அழுதால் உன்னைப் பெறலாமோ? நீயோ

என்று இவ்வாறு அடிகளார் திருவாசகத்தில் அழுகையைக் கற்பித்த இடங்கள் அனேகம். அவை யாவும் அழுதால் உன் னைப் பெறலாமோ? என்று எழுப் பிய வினாவிற்குப் 'பெறலாம்' என்னும் விடையை எச்சப்பொரு ளாக உணர்த்தாது உணர்த்தும் உண்மையை உணரத்தருவன.

# தமிழ் வர்த்தகர் சுட்டுக்கொலை

திருகோணமலை மூதூரில் தமிழ் வர்த்தகரான தம்பிப்பிள்ளை செல்வராஜா (வயது 48) நேற்று முன்தினம் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இராணு ஆக்கிரமிப்புப் பிர தேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழ மையிலிருந்து சுட்டுக்கொல்லப் பட்டுள்ள மூன்றாவது தமிழர் இவர்.

மூதூர் சந்தை அருகே தனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியவில் தம்பிப் பிள்ளை செல்வராஜாவை இனம் தெரியாத நபர்கள் சுட்டுக்கொன் றனர்.

இந்தத் தாக்குதலையடுத்து மூதூர் நகர தமிழ்க் குடும்பங்கள் அங்குள்ள தேவாலயங்களில் பாதுகாப்பு தேடி அகதிகளாகச் சென்றுள்ளனர்.

மூதூர் தமிழர்களின் பாதுகாப் புக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச படை யினருக்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் திஸ்ஸ ஜயவர்த் தன, கிழக்குப் பிரதேச பிரதி பொலிஸ்மா அதிபர் றோகான் அபயவர்த்தன பொலிஸ் அதிகாரி ஹெச்.என்.பி.அம்பனவெல ஆகி யோருக்கு இந்த வேண்டுகோள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரில் தமிழ் ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தரா ஜன் மற்றும் மூதூரில் சுந்தரலிங் கம் ஆகியோர் கடந்த செவ்வாய்க் கிழமை படுகொலை செய்யப்பட் டமையும் குறிப்பிடத்தக்கது. (து)

## இரசாயனக் கூடங்கள் 2 வாரங்களில் நடைமுறைக்கு

இரசாயனக் கூடங்கள் மற் றும் தேசியக் கொள்கையை எதிர் வரும் இரண்டு வாரங்களில் நடை முறைப்படுத்த சுகாதார அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பிடப்பட்ட தேசியக் கொள் கையை அமைச்சரவை அங்கீ காரத்திற்கு விடுவதற்கென சுகா தார அமைச்சிடம் ஒப்படைத்துள் ளதாக இராசாயன கூடச் சேவை கள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்கை பிரகடனத் தின் மூலம் நாட்டிலுள்ள இரசாயன கூடங்களின் சேவைகளை மேம் படுத்தவும் அவற்றின் செயற்பாடு களின் தரத்தை உயர்த்தவும் எதிர் பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இரசாயனக்கூடங்கள் ஒவ்வொன்றி லும் இர சாயனக் கூட ஆய்வாளர் ஒருவரை நியமிப்பதும் கட்டாயமாக் கப்படவுள்ளது. (த-9)

## மட்டக்களப்பில் தொடரும் சோதனை நடவடிக்கை

மட்டக்களப்பு நகரில் சோத னைக் கெடுபிடி, படையினர் அச் சுறுத்தல் என்பன தொடர்கின்றன அண்மையில் ஊறணியில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் மூன்று படையினர் பலியானதுடன் மேலும் மூவர் படுகாயடைந்ததன் எதிரொலியாக சுற்றி வளைப்புத் தேடுதல் வீதிச் சோதனை நடவடிக் கைகளில் படையினரும், பொலி ஸாரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் மக்கள் பெரும் அச் சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள னர். அத்துடன் பல்வேறு தேவை களுக்காக நகருக்கு வரும் மக்க ளின் தொகையும் குறைவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை மாலையானதும் வர்த் தக நிலையங்கள் பூட்டப்படுவது டன் வீதிகள் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிப் போய்விடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (து)

## இராசிபலன்

**27.01.2006**
**(தை 14, வெள்ளிக்கிழமை)**
**திரயோதசி பின்னிரவு 1.10 மணிவரை**
**மூலம் பிற்பகல் 2.05 மணிவரை**
**இராகுகாலம் 04.06-5.36 மணிவரை**
**சுபநேரம் 10.06-2.36 மணிவரை**
**அமிர்த சித்தம், பிரதோஷ விரதம்**

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை, புதிய திட்டமிடல், பிதாசிந்தை, முயற்சி தாமதம். |
| இடபம் | வாகனபயம், எதிர்பாராத பிரச்சினை, ஆரோக் கியக்குறைவு, காரிய தடங்கல். |
| மிதுனம் | தெய்வதரிசனம், காரிய அனுகூலம், நண்பர் கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| கடகம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், தெய்வ தரிசனம், சத்துரு ஜெயம். |
| சிங்கம் | குடும்பக்கவலை, பணக்குறைவு, முயற்சி தாமதம், வியாபார நன்மை. |
| கன்னி | கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், சுபசெலவு, தாய்வழி உறவு. |
| துலாம் | சகோதரர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தெய்வதரிசனம், பொருள்சேர்க்கை. |
| விருச் சிகம் | கோபப்படுதல், காரிய தாமதம், பணவிரயம், சகோதரர் உதவி. |
| தனுசு | நல்ல முயற்சி, தெய்வசிந்தை, போசனசுகம், எதிர்பாராத நன்மை. |
| மகரம் | உஷ்ண வியாதி, சுபசெலவு, பிரயாணம், காரிய தாமதம். |
| கும்பம் | தெய்வசிந்தை, எடுத்தகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, புகழ். |
| மீனம் | கடினமுயற்சி, பெருமையடைதல், தூரதேசச் செய்தி, தெய்வசிந்தை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்கள் அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட நிந்தவூர் பிரதேச மக்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை நிந்தவூர் பிரதேச செயலகத் திற்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்தினர்.

நிந்தவூர் பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்களி லிருந்து நிந்தவூர் அரசடியிலிருந்து பிரதான வீதி யூடாக முழக்கங்களை எழுப்பி பிரதேச செயலகத்தை நோக்கி பாதிக்கப்பட்ட மக்கள் புறப்பட்டனர்.

பிரதேச செயலகத்தைப் பேரணி அடைந்தும் பிர தேச செயலகத்திற்கு முன்பாக பிரதான வீதியில் அனைவரும் அமர்ந்து வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த பேரணியால் போக்குவரத்துத் தடைப்பட்டது.

போராட்ட இடத்திற்கு வந்த சிறப்பு அதிரடிப்படை யினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் உரையாடி யதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

தொடர்ந்து பிரதேச செயலகத்திற்குள் நுழைந்து மக்கள் பிர தேச செயலகத்தை முற்றுகையிட்டனர் அப்போது ஏற்பட்ட முறுகலில் பிரதேச செயலாள ரின் அலுவலகத்தின் கண்ணாடி கள் நொறுக்கப் பட்டன.

இப் போராட்டத்தை கடற்கரை யிலிருந்து 200 மீற்றருக்கு உட் பட்டவர்கள் நடத்தினர். ஒரு வருடம் கழித்த பின்னரும் நிரந்தர வீடுகள் அமைக்க நடவடிக்கை எடுக்காதது ஏன்? அரசே எங்களை மீண்டும் கடலில் தள்ளிவிடாதே! இன்னும் எத்தனை வருடத்திற்கு இந்த அணி வாழ்க்கை! ரூபா 5,000 கொடுப்பனவை மீண்டும் உடனடியாக வழங்கு!

சமுர்த்திவங்கிவழங்கும் ஆழிப் பேரலை முத்திரை பணக்கொடுப் பனவில் பாரபட்சம் காட்டுவது எதற்காக? ஆகிய கோஷங்களை இதன் போது அவர்கள் எழுப்பினர்.

ஆழிப் பேரலை அகதிகளின் கோரிக்கை மனுவும் பிரதேச செய லாளர் எஸ்.எல்.எம்.ஹசீமிடம் கையளிக்கப்பட்டது. (து)

## ஆலோசனைக் கூட்டங்கள்

யாழ்.மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவது குறித்த ஆலோசனைக் கூட்டங் கள் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலக மகா நாட்டு மண்டபத்தில் மு.ப.10மணிக் கும் கோப்பாய் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பி.ப. 2.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

எனவே குறிப்பிட்ட பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பொது மக்கள் பிரதிநிதிகள், சமூக மட்ட நிறுவன அங்கத்தவர்கள், கல்வி மான்கள் ஆகியோர் இக் கூட்டத் தில் கலந்துகொண்டு ஆலோசனை களை தெரிவிக்கலாம் என யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். (கு)

# வீதி சுத்திகரிப்புக்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீட்டுத்தோட்டங்களிலிருந்து வெட்டப்படும் வாழைக் குற்றிகள் பூமரக் கொப்புகள், போன்றவற்றை வீதி யோரங்களில் வீசுவதனால் வீதிப்போக்குவரத்திற் கும், சுகாதாரத்திற்கும் இடையூறுகள் ஏற்பட்ட வண் ணமுள்ளதாக தமது கவனத்திற்கு கொண்டுவரப்பட் டுள்ளது. என மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வீதியோரக் கழிவுகளை அகற்றும் வாகனங் களில் பெரும்பாலானவை மேற் குறித்த கழிவுகளை ஏற்றிப் பறிப்பதில் நாள்தோறும் ஈடுபடுவதனால் ஏனைய அன்றாடக் கழிவுகளை நாள்தோறும் முழுமையாகஅகற்ற முடியாதநிலையேகாணப்படுகின்றது.

இவ்வாறானநிலைமைகள் உரு வாவதைத் தவிர்க்கும் பொருட்டு மேற்படி கழிவுகளை தத்தமது வள வினுள் புதைத்தோ, அன்றேல் எரித்தோ அல்லது குவித்து வைத்தோ, சுகாதாரத்தைப் பேணு வதில் தம்முடன் ஒத் துழைக்குமாறும் ஆணையாளர் கேட் டுள்ளார்.

இந்நிலைமை கட்டுப்படாது தொடருமாயின் மாநகரசபையின் பரிசோதனைக்குழுவினர் வீதி யோரங்களில் வீசப்படும் மேற்படி கழிவுகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்பதை இனங்கண்டு அவற்றை அகற்றுவதில் ஏற்படும் செலவினம் முழுவதையும் சம்பந் தப்பட்டவர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகி விடும் என் றும் ஆணையாளர் மேலும் அறி வித்துள்ளார். (கு)

# புலிகளுடன் ஏன் நேரடியாகப் பேச முடியவில்லை? மஹிந்தவிடம் கேள்வி எழுப்புகிறார் ரணில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் ஏன் நேரடிப் பேச்சுக்களை நடத்த முடியவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க,

தங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக யுத்த முழக்கங்களை எழுப்புபவர்களுக்கு மீண்டும் இடமளிப்பதா?

இல்லை. சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் யுத்தத்தை நிறுத்தி சமாதான செயற்பாடுகளில் ஈடுபட்டு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுத்து நாட்டை ஐக்கியப்படுத்துவதா? என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டிய காலம் தற்போது மலர்ந்துள்ளது.

இந்த முழக்கங்களை எழுப்புபவர்கள் மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் இராணுவத்தில் இணைந்து தங்களின் உயிரைத் தியாகம் செய்வதற்குத் தயாராக இல்லை.

தாய்நாட்டிற்காகப் போராட முன்வருமாறு அப்பாவித் தாய் தந்தையரின் பிள்ளைகளுக்கு அழைப்பு விடுத்து அவர்களின் உயிரை யுத்தத்திற்குப் பலி கொடுக்கவே முயற்சிக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடத் தயாராக உள்ள போதிலும் அந்த அமைப்புடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு இதுவரை அரசாங்கத்தினால் முடியாதுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த அனைத்துக் கட்சிகளுக்கும் அந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சமதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளினாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு வெளிநாட்டு அனுசரணையின்றி தீர்வுகாணப்பட வேண்டும் என்ற வாதம் இன்று வலுவிழந்து போயுள்ளது என்றார். (தி)

## மரக்கறிகளை கொள்வனவு செய்ய படையினர் தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் மரக்கறிவகைகளைச் சாதாரண விலைக்குக் கொள்வனவு செய்ய பாதுகாப்புப் படையினர் தயாராகவுள்ள தாகப் பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் எதிர்வரும் நாட்களில் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் என்றும் தலைமையகம் அறிவித்துள்ளது. (க)

## தனித்தரப்புக் கோரிக்கை நிராகரிப்பு; முஸ்லிம் சபை கவலை தெரிவிப்பு!

(கொழும்பு)

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான பேச்சுக்களில் முஸ்லிம்களைத் தனித்தரப்பாக இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளமை கவலை அளிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் சபை கவலை தெரிவித்துள்ளது.

58 முஸ்லிம் அமைப்புக்களின் கூட்டமைப்பான முஸ்லிம் சபை மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

முஸ்லிம்களைத் தனித்தரப்பாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நீங்கள் நிராகரித்திருப்பது எமக்குக் கவலையளிக்கிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது முதலே இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது.

அமைதி முயற்சிகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக இணைக்கப்படாவிட்டால் முஸ்லிம்களினது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அமைதி நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் விலக்கி வைக்கப்பட்டுவிடும் நிலை உள்ளது.

இருந்தபோதும் அமைதி முயற்சிகள் வெற்றி பெற நாங்கள் பிரார்த்திக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

## பாதிக்கப்பட்ட பிரதேசங்களை ஐ.நா.சபை அபிவிருத்தி செய்யும்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 4 பிரதேசங்களை முழுமையாக அபிவிருத்தி செய்ய ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை வாழ்விடத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகர சபை, கிளிநொச்சிநகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை, காத்தான்குடி நகர சபைப் பிரதேசங்கள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் வாழ்விடத்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசங்களில் பல கோடி ரூபா செலவில் அடிப்படை வசதிகள் உட்பட நூலகங்கள், சிறுவர் பூங்காக்கள், வீதிகள், சுயதொழில் நிலையங்கள் உள்ளிட்ட பல அபிவிருத்திப் பணிகள் இத்திட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (க-9)

## 3:4 தொண்டர் ஆசிரியர்களுக்கு பெப்ரவரியில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் 314 பேருக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய தகுதிபெற்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் 54 தொண்டர் ஆசிரியர்களுக்கும் வவுனியாவில் 7 பேருக்கும் அம்பாறையில் 253 பேருக்கும் இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (தி)

## கொலைச் சந்தேக நபர் பொலிஸாரிடம் சரணடைந்தார்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சந்தா தோட்டத்தைச் சேர்ந்த சுதன் என்ற நபரின் படுகொலைச் சந்தேக நபர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இதனையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சித்திரதாஸ் சுதன் என்பவர் கடந்த 6ஆம் திகதி தும்பளை உத்திராவத்தையில் மண்வெட்டியால் கொத்தப்பட்டும் அடித்தும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இப்படுகொலைச் சந்தேக நபரான பருத்தித்துறை கூழாவடியைச் சேர்ந்த நடராசா வேலுச்சாமி என்பவர் இராணுவத்தினர் மூலம் பொலிஸாரிடம் அண்மையில் சரணடைந்தார்.

பருத்தித்துறை பொலிஸார் சந்தேக நபரை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (க-52)

## பொலிஸ் உத்தியோகத்தர் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குளியாபிட்டியவைச் சேர்ந்த 40 வயதுடைய கே.ஏ.டிசரத் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவரை நேற்றுக்காலை 10.30 மணியளவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சிப் பிரதிநிதியிடம் ஒப்படைத்ததாக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயாமஸ்ரர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது நோர்வே விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் விடுத்த வேண்டுகோளையடுத்து இவர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் இவரை விடுதலை செய்வதற்கு நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்ததையடுத்து இவர் விடுதலை செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (க-9)

## வரணி மாணவன் படுகொலைக்கு மாணவர் ஒன்றியம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வரணி - சுட்டிபுரத்தில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுவிட்டு திரும்பிய கந்தசாமி வைகுந்தன் என்ற மாணவன் கடந்த 24ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்குத் தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில்,

வரணியைச் சேர்ந்த கந்தசாமி வைகுந்தன் என்னும் மாணவன் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போது, சுட்டிபுரம் அம்மன் ஆலயத்திற்கு அருகில் வைத்து இராணுவப் புலனாய்வாளர்களாலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணைக்குழுக்களாலும் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளான்.

சுட்டுக்கொல்லப்பட்ட எமது உடன்பிறப்புக்களின் இரத்தத்துளிகளில் இருந்து நயவஞ்சகர்களை அழிக்கின்ற ஓர்மம் கொண்ட மாணவர் சமூகமாக நாம் திரண்டு எழுவோம்.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவத்தாலும் துணை ஆயுதக் குழுக்களாலும் எமது மக்கள் அன்றாட வாழ்வியலைக் கூட அனுபவிக்க முடியாத நடைப்பிணங்களாக வாழ்கின்றனர்.

அன்றாட ஜீவனோபாயத்துக்காக உழைக்கும் வறிய மக்கள் மீதும் கல்வி கற்று வாழத்துடிக்கும் மாணவர் சமூகத்தின் மீதும் போர் வெறிகொண்ட சில தீய சக்திகள் துப்பாக்கி முனையை ஓங்கச் செய்துள்ளனர்.

இந்தச் செயல்கள் எம்மை வலிந்து வீதிக்கு இழுப்பதுடன் துப்பாக்கி தூக்கிப் போராடும் நிலைக்குத் தள்ளிவிட எத்தனிக்கின்றன.

இவ்வாறான செயல்கள் தொடர்ந்தும் இடம்பெறுமானால் அதனால் ஏற்படும் விளைவு விபரீதமாகும் என்பதை மாணவர் சமூகம் புரியவைக்கும் காலம் கனிந்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## பெப்ரவரி - 9 வரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென அறிவிப்பு

(கொழும்பு)

மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கால எல்லை எதிர்வரும் 16ஆம் திகதி நண்பகலுடன் பூர்த்தியடைவதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

சுயாட்சி குழுக்களுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை அடுத்தமாதம் 15 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் முடிவடைவதாக தேர்தல் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட தேர்தல் செயலகங்கள் அல்லது மாவட்ட செயலகங்கள் மூலம் வேட்புமனுக்களும் கட்டுப்பணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு மாவட்டத்திற்கான வேட்பு மனு மற்றும் கட்டுப்பணம் இராஜகிரியாவிலுள்ள பிரதான தேர்தல் செயலகத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

இது தொடர்பான அறிவித்தல்கள் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி மூலம் காட்சிக்கு வைக்கப்படும்.

இதேவேளை, நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (க-9)

## நிதியுதவி

(பருத்தித்துறை)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் எல்லை மதில் நிர்மாணத்திற்கென 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளது.

இவ் எல்லை மதில் நிர்மாண வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (க-52)

## இன்று ஒரு தகவல்

# ஆத்மனைப் பூசல்

ஒரு ஏழை விவசாயி எங்கேயோ வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த சமயம் பார்த்து... சிறிய வயது நண்பர் ஒருவர் அவரைப் பார்க்கவந்து சேர்ந்தார். "கொஞ்சநேரம் வீட்டில் இரு. சில நண்பர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். அதன்பின் நாம் சாவகாசமாக பேசிக் கொண்டிருப்போம் என்றான் அவன. "நானும் உன்னுடன் வருகிறேனே... ஆனால் அதற்கு நீ ஒரு உதவிசெய்ய வேண்டும்" என்றான் அவன். "என்ன?" என்றான். "என்னுடைய ஆடை நன்றாக இல்லை... அழுக்காக இருக்கிறது. உன்னிடம் விலைஉயர்ந்த ஆடைகள் ஏதாவது இருந்தால் கொடு. அதைப் போட்டுக்கொண்டு வருகிறேன். திரும்பிவந்ததும் கழற்றிக் கொடுத்துவிடுகிறேன்" என்றான்.

அவன் பார்த்தான்... கொஞ்சக் காலத்திற்கு முன்பு ராஜா அவனுக்குப் பரிசாகக் கொடுத்திருந்த விலை உயர்ந்த ஆடைகள் பெட்டியில் இருந்தது. அதை எடுத்துக்கொடுத்து போட்டுக்கொள் என்றான். இவன் வாங்கிப் போட்டுக் கொண்டான். பார்க்க ராஜாமாதிரி இருந்தான். நண்பன் உடையைக் கடன்கொடுத்த இவனது நண்பனே இவனுடைய தோற்றத்தைப் பார்த்துப் பொறாமைப்பட ஆரம்பித்துவிட்டான். "என்ன இது இவன் நம்மிடம் உடை வாங்கிப்போட்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் ராஜா மாதிரி இருக்கிறது. என்னைப் பார்த்தால் அவனுக்கு வேலைக்காரன் மாதிரி இருக்கிறது. இந்த உடையை அவனிடம் கொடுத்தது தவறாகிவிட்டதே" என்று நினைத்தான். அவனுக்குள்ளேயே இன்னொருமனம்.. இந்தக் கோட்டிலும் தலைப்பாகையிலும் என்ன இருக்கிறது. இவன் எனது நண்பன். அவனுக்கு நான் இதைக் கூட செய்யக் கூடாதா? என்றும் நினைத்தான். மனதிற்குள்ளே ஒரு விவாதம் நடக்கிறது. இருந்தாலும் அந்த உடைதான் அவனது மனதில் அதிக இடத்தைப் பிடித்தது. அவர்கள் இருவரும் ஒரு நண்பனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த நண்பனிடம் இவன் சொல்கிறான் "இவன் என்னுடைய பால்ய நண்பன் கூட அழைத்துக் கொண்டு வந்தேன். மிகவும் நல்லவன். அவன் போட்டிருக்கிறானே உடை! அது என்னுடையது" என்றான்.

நண்பனுக்கு அதிர்ச்சி. இவனும் அதற்குப் பிறகுதான் யோசித்தான். உடை விஷயத்தைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை என்று. நண்பனிடம் மன்னிப்புக் கேட்டான். இனிமேல் எச்சரிக்கையாக இருப்பேன் என்றான். உடை என்னுடையது என்று சொல்லக் கூடாது என்று முடிவு செய்து கொண் டான். இரண்டு பேரும் சேர்ந்து இன்னொரு வீட்டுக்குப் போனார்கள்.

அங்கே அறிமுகத்தை ஆரம்பித்தான். இவன் என்னுடைய பால்ய நண்பன் என்னுடன் அழைத்துக்கொண்டு வந்தேன் மிகவும் நல்லவன் இன்னொரு முக்கியமான விடயம் அவன் அணிந்திருக்கும் ஆடை என்னுடையது இல்லை என்றான். இது முதலில் கூறியதை விட மோசம். இரண்டு பேரும் வெளியில் வந்தார்கள். என்னை மன்னித்துவிடு எச்சரிக்கையாகத்தான் இருந்தேன். வாய்தவறி உளறிவிட்டேன். இனிமேல் உன்னை அறிமுகப்படுத்தும் போது இந்த உடை சமாச்சாரத்தை சொல்லவே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டேன் என்றான்..

அந்த இரண்டு பேருமாகச் சேர்ந்து மூன்றாவதாக ஒருவர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே இவன் மிகவும் கவனமாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தான்.இவன் என்னுடைய பால்ய நண்பன் அழைத்துக் கொண்டு வந்தேன். மிகவும் நல்லவன். அந்த உடைவிஷயம் பற்றி நான் எதுவும் சொல்லமாட்டேன். ஏனென்றால் சொல்லமாட்டேன் என்று சபதம் செய்திருக்கிறேன் என்றான். இது எல்லாவற்றையும் விடமோசம்.

இந்தக் கதையைக் கொஞ்சம் ஆழமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமது பலவீனங்கள் எதுவோ அதுவே நாமாக இருக்கிறோம்.ஆனால் நமது பலவீனங்களை அடக்குவதற்குத் தீர்மானிக்கிறோம். அதனால் இயற்கையாகவே அது நமது ஆழ்மனதில் பூசல்களுக்கு மூல காரணமாகி விடுகிறது.நான் துறவியாகவே இருக்கப் போகிறேன் என்று ஒருவன் குரலை உயர்த்திச் சொல்கிறான் என்றால் அதற்கு நேர் எதிரான எண்ணம் அவனுக்குள்ளிருந்து தாங்கமுடியமால் வெளியே வருகிறது என்று அர்த்தம் என்கிறார் ஒரு பெரியவர்.

இந்தக் காலத் துறவி ஒருவர் தன்னுடைய சிஷ்ய னுக்கு வாயை ஒரு துணியால் இறுக்கிக்கட்டி வைத்திருந்தார். எதற்கு இப்படி? உங்கள் சீடருக்கு மௌனத்தின் மகிமையை உணர்த்துவதற்காக இப்படி செய்து வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டேன்." அட நீங்கள் வேறு அவன் இன்றிலிருந்து என்னைப் பற்றிய உண்மைகளைப் பேசப்போவதாகச் சபதம் எடுத்திருக்கிறான். அதற்காகத்தான் அவன் வாயில் துணியைத் திணித்துக் கட்டிப் போட்டிருக்கிறேன்" என்றார் அந்தக் குரு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அனைத்து அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்

## கொள்கைத் திட்டமிடல், திட்டஅமுலாக்கல் அமைச்சர் ஹேகலியரம்புக்வெல்ல

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கொள்கைத் திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சர் ஹேகலிய






ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுவான ஒரு நிகழ்ச்சிநிரலின் கீழ்செயற்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அரசாங்கத்தில் இணைந்து கொண்டதாக தெரிவித்துள்ள அமைச்சர் எந்த சவாலையும் எதிர்கொள்ள தான் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகிச் செல்வதில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று தானும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த சமரசிங்க இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (சு-39)

## விடுதலைப் புலிகள் கூறியது என்ன?

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு சொல்ஹெய்ம் விளக்கம்

(கொழும்பு

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்



துரையாடினார்.வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனான சந்திப்பின் விபரங்களை இச் சந்திப்பில் விளக்கியுள்ளார்.

இச் சந்திப்பு தொடர்பாக நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, அரசின் அழைப்பினை ஏற்று யுத்த நிறுத்த உடன்படிக்கையினை ஸ்திரப்படுத்துவதற்கான நேரடிப்பேச்சுக்களில் சுவிஸில் ஈடுபட விடுதலைப் புலிகளின் தலைமை உடன்பட்டிருப்பதை ஜனாதிபதி வரவேற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் தனது அரசாங்கம் இவ்விடயத்தில் கொள்கையொன்றைக் கடைப்பிடித்து இதய சுத்தியுடன் நேர்மையாக செயற்பட்டு இச் சந்தர்ப்பத்தினை நழுவவிடாது, சமாதான முயற்சிகள் வெற்றியடைய தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பில் சகல அனுசரணை முயற்சிகளை எடுக்கும் படி அரசாங்க சமாதான செயலகத்திற்கு ஜனாதிபதி விசேட உத்தரவும் பிறப்பித்துள் ளார். நோர்வேயின் அனுசரணையாளர்கள் இவ் விடயத்தில் சுவிஸ் அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

எவ்வளவு விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அதனை ஆரம்பிக்க அரசாங்கம் ஆர்வமாக இருக்கிறது.

அரசு சார்பில் சமாதானத் தூதுக்குழுவில் யார், யாரெல்லாம் பங்குபற்றுவார்கள் என்பதை ஜனாதிபதி விரைவில் தீர்மானிப்பார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சு-4)

# ஐ.தே.க உறுப்பினர்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தில் இணைவு?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 7 மாவட்டத் தலைவர்கள் மற்றும் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்தவின் பக்கம் தாவக்கூடும் என்று தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் இத்தகைய நிலைப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தால் பாராளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மையுடன் கூடிய எதிர்க் கட்சி என்ற தகுதியை இழப்பதோடு எதிர்க்கட்சித் தலைவர் என்ற தகுதியையும் ரணில் விக்கிரமசிங்க இழக்கக் கூடிய நிலை ஏற்படும் என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கண்டி பாராளுமன்ற உறுப்பினர் ஹேகலிய ரம்புக்வெல மற்றும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க ஆகியோர் திட்டமிடல் மற்றும் இயற்கைப் பேரழிவு மேலாண்மை அமைச்சர்களாக நேற்று முன்தினம் பொறுப்பேற்றனர்.

மேலும் 5 ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசுடன் இணைவது உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் 20 பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்தில் இணையவுள்ளனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச் சினைகளில் மஹிந்தவை ஆதரிப்பதற்காக தாம் அரசாங்கத்தின் அமைச்சராகப் பொறுப்பேற்றதாக அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு தாவுவோர் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளமை குறித்து கருத்துத் தெரிவித்த ரம்புக்வெல அவர் விருப்பப்படி நடவடிக்கை எடுக்கட்டும் என்றார்.

கட்சியின் மூத்த தலைவர்களாக இருந்த லலித் அதுலத் முதலி மற்றும் காமினி திஸநாயக்க ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி மற்றொரு தனிக்கட்சியைத் தான் துவக்கினார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சராகப் பொறுப்பேற்றதும் ஜனாதிபதி செயலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த மஹிந்த சமரசிங்க தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக தொடர்ந்து நீடிப்பதாகத் தெரிவித்தார். (நி)

# உண்மைக்காக எதையும் துறக்கலாம்

## சுவாமி சித்ரூபானந்தா

(யாழ்ப்பாணம்)

உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கக்கூடாது.

மேற்கண்டவாறு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 144ஆவது ஜன்ம தினவிழாவிலே உரையாற்றிய பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா குறிப்பிட்டார்.

கல்லூரியின் இந்து மாமன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விழாவிற்கு அதிபர் திருமதி கே.பொன்னம்பலம் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய சுவாமி சித்ரூபாந்தா குறிப்பிட்டதாவது,

மூடக்கொள்கைகள் உதறித் தள்ளப்படவேண்டும். இன்று நமக்குத் தேவையானது வலிமையே. நாம் வலிமையோடு இருக்க வேண்டும்.

அத்துடன் ஏழைகளுக்காக இரங்க வேண்டும். இமயம் முதல் கன்னியாகுமரி வரை கால்நடையாகச் சென்ற சுவாமி விவேகானந்தர் மக்களின் வாழ்க்கைமுறையைக் கண்டார். ஆகையால் அவரது செயல் திட்டம் செயல்முறை வேதாந்தம் என்று பகரப்படுகின்றது.

தற்காலத்திலே மேடைப் பேச்சிலே மாத்திரம் பலர் அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். செயல் என்பது பூச்சியமாகவே இருக்கின்றது.

ஆனால் சுவாமி விவேகானந்தரின் வாழ்வில் பின்னிப் பிணைந்த ஸ்ரீ இராமகிருஸ்ண சங்கத் துறவிகள் கடுமையாக உழைத்து வருகின்றனர். இதன் அடிப்படையில்தான் சுவாமி விவேகானந்தரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யமுடியும்.

கடந்த ஆண்டு (4.7.2005இல்) கல்கத்தா வேலூர் மடத்தில் தனி நிகர் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தர் எமக்கு வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைப்படி வாழ்ந்தால் வாழ்வின் இலட்சியத்தை அடையமுடியும் என்றார்.

அதிபர் திருமதி பொன்னம்பலத்திடம் சுவாமி சித்ரூபானந்தா சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை முறைகள் அடங்கிய நூல்களைக் கையளித்தார். (க-52)

## வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

அராலி மத்தி- வண்ணபுரம் விவசாய வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது பாரிய குன்றும் குழியுமாக இருந்தது.

தற்போது நியாப் திட்டம் II நிதி ஒதுக்கீடு மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. சுமார் 750 மீற்றர் தூரம் நீளமான இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை வலி மேற்குப் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது. (த-49)

# போராட்டம் கைவிடப்பட்டது

மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கடந்த இரண்டு நாட்களாக மேற்கொண்டு வந்த ஆர்ப்பாட்டம் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டம் என்பன நேற்று முன்தினம் முதல் கைவிடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளரை வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் இடமாற்றம் செய்ததைக் கண்டித்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பணிகளைப் பகிஷ்கரித்து மாநகரசபை முன்றலில் மறியல் மற்றும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களை நடத்தி வந்தனர்.

இதன் காரணமாக மாகாண ஆளுநர் அவரது இடமாற்றத்தை இரத்துச் செய்தார். அதை அடுத்து ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக மாநகரசபை ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் வழமையான நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-9)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றும் நிகழ்வு நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 30 ஆம் திகதி வரை இடம்பெறும்.

அதற்கமைய இன்று மு.ப 9 மணி முதல் நண்பகல் 12மணிவரை பிறவுண் வீதியில் உள்ள வைரவர் கோவிலடி, பிரம்படிலேன் சனசமூக நிலையம், இந்திரா சனசமூக நிலையம், கொக்குவில் கிழக்கு ஆகியவற்றில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

தொடர்ந்து 1 மணிமுதல் பி.ப 3மணி வரை வளர்மதி சனசமூக நிலையம் (சம்பியன்லேன்), கொக்குவில் சனசமூக நிலையம் (கே.கே.எஸ்.வீதி), நந்தாவில் லேன், முதலியார் கோவிலடி ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது. (க)

# பேச்சு நடத்த இணங்கியமையை வரவேற்கிறது ஐ.நா சபை!

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அடுத்த மாதம் பேச்சுவார்த்தைகளை நடத்த இணக்கம் தெரிவித்துள்ளமையை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுள்ளது.

இரு தரப்பினரும் யுத்த நிறுத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அனுசரணையாளர்களாக செயற்பட்ட நோர்வே அரசாங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் கொபி அனானின் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்செயல்களை முடிவிற்குக் கொண்டு வர சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம் நிலவுவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சமாதானம் தொடர்பாக ஏற்பட்டுள்ள இந்த எதிர்பார்ப்பு இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்யும்.

யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கடந்த வாரம் இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் கொபி அனான் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# கொழும்பில் வெடித்த குண்டுகள் ஒரே இடத்தில் தயாரிக்கப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் சன நெரிசல் மிக்க ஐந்து இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வெடித்த குண்டுகள் ஒரே இடத்தில் தயாரிக்கப்பட்டது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குண்டு வெடித்த இடங்கள் குண்டுகளைச் செயலிழக்கும் அதிகாரிகளால் முழுமையாகப் பரிசோதனை செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

குறிப்பிடப்பட்ட இடங்களில் கண்டெடுக்கப்பட்ட குண்டுக்ளின் பகுதிகள் அனைத்தும் சமமானவை என்றும் ஒரே இடத்திலேயே அவை தயாரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார். (க-7)

# பனைகளைத் தறிக்கும் கடற்படையினர்

(பொன்னாலை)

சுழிபுரம்- புளியந்துறைப் பகுதியில் பெருந்தொகையான பனைமரங்களை கடற்படையினர் தறித்து வருகின்றனர் என்று அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சுழிபுரம் மேற்கு அலைமகள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பனங்கூடல் ஒன்றிலிருந்து சுமார் 40இற்கும் அதிகமான பனைமரங்கள் கடற்படையினரால் தறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே தடவையில் பெருந்தொகையான மரங்களை எவ்விதமான முன்னறிவித்தலும் இன்றி பனைமரங்களைத் தறித்திருப்பதாகவும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

பனைமரங்களைத் தறித்துவரும் கடற்படையினர் கரையோரங்களில் 100 மீற்றருக்கு ஒன்று என்ற ரீதியில் காவலரண்களை அமைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-49)

## சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கிய

# சிற்றூழியர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டார்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரைக் கடமை நேரத்தில் தாக்கி அலுவலக நடவடிக்கைகளை சீர்குலைத்தமைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சபையின் சிற்றூழியர் வல்வெட்டித்துறை நகரசபையாற் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த வல்வெட்டித்துறை நகரசபை சுகாதாரப் பரிசோதகர் எஸ்.நவன் கடமையிலிருந்த போது அழகுமலை ஜெகநாதன் என்ற சிற்றூழியர் அவரைத் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் அவர் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தாக்குதல்களுக்குள்ளான பொது சுகாதாரப் பரிசோதகர் வல்வெட்டித்துறை நகரசபையில் கடமையாற்ற முடியாதுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண யாழ்.பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து அரசாங்க சட்ட விதிகளுக்கு இச்சிற்றூழியர் தற்போது உள்ளூராட்சித் திணைக்களத்தின் பணிப்புரைக்கமைய தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (க-52)

# பேச்சுக்கு புலிகள் இணங்கியமை நம்பிக்கையூட்டும் விடயமாகும்

## நிமால் சிறிபால டி சில்வா

சுவிற்ஸர்லாந்தில் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட யோசனையை தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு ஏற்றுக்கொண்டமை நம்பிக்கையூட்டும் நடவடிக்கை என்று அரசாங்கத்தின் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல இயன்றளவு முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நாள் மற்றும் ஆரம்பிக்கும் இடம் தொடர்பாக சுவிஸ் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானம் எடுக்குமாறு அரசாங்க சமாதான செயலகத்திற்கு ஜனாதிபதி ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். (த-9)

# புதிய கேட்போர் கூடம்

அராலி மத்தி- வண்ணபுரம் கிராமத்தில் நியாப் திட்ட நிதியுதவியுடன் புதிய கேட்போர் கூட மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கேட்போர் கூட மண்டபத்திற்கு நியாப் நிறுவனம் சுமார் 10 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து அராலி மத்தி- வண்ணபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரிடம் வழங்கியுள்ளது.

இக்கேட்போர் கூடம் வண்ணபுரம் கிராமத்தில் உள்ள அனைத்துப் பொது அமைப்புக்களினதும் கூட்டம் மற்றும் பொது நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-49)

# 28 பேர் கொழும்பில் கைது

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்கள் சம்பந்தமாக 28 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கொழும்பின் பல இடங்களிலும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பில் குண்டுகள் வெடிக்கும் என்ற வகையில் அண்மையில் சில பத்திரிகைகளில் வெளியான செய்திகள் குறித்து தாம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (த-9)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

(தொடர்ச்சி...)

## பன்னிரு இராசிகளுக்கும் நவம்பர் மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் ரா | நவம்பர் ராசி நிலை | | சனி |
| | | | கே |
| | குரு | சு பு செ சூ | |

### மேடம்
**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)**

சகோதர, சகோதரி வகை முக்கிய செலவுகள் இருக்கின்றன. குடும்ப உறவில் நடக்கும் விஷேசங்களில் கலந்துகொள்வது விருந்து உண்பதும் உண்டாகும். பிரயாணத்தினால் பெருத்த ஆதாயம் இல்லை என்றாலும், குறிப்பிட்ட நன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. தொழில் கூட்டு முயற்சி இப்போதுதான் உருவகத்திற்கு வந்திருக்கின்றன. சற்று வேகமாய் போங்கள். வெற்றி உங்களை நெருங்குகிறது. எதிலும் தயக்கம் இல்லாமல் செயல்படவும், உங்கள் சொல்லுக்கும் திருப்தியானது. அலுவலக சூழ்நிலையும் மற்றவர்களால் புகழப்படும். மற்றபடி குடும்பத்தில் இடை இடையே மருத்துவச் செலவு இருக்கும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு கௌரவப் பட்டம் மற்றவர்களால் பாராட்டு போன்றவை இருக்கும். பணம் பற்றாக்குறை இல்லை. பட்டாடை, அணிகலன் சேர்க்கை உண்டாகும். இதில் பழைய ஆபரணம் வாங்குவதும் முக்கிய அம்சமாகும். கலைப் பொருட்கள் குடும்பத்திற்கு சேர்க்கையும் உண்டாகும். கணவன், மனைவி உறவு கவர்ச்சிகரமாகவே இருக்கிறது. உங்கள் செயல் உறவினர் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கி இருக்கிறது. எனவே உங்கள் பங்குதான் அதிகம். செய்தொழில் வகையில் கூட்டு மனிதர்களிடமும் சுமூகமான போக்கை வளர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. உங்களுக்கு ஏழரைச்சனி கால பாதச் சனி என்பது மறக்கவேண்டாம். எழுத்து மூலத்தில் சில நன்மையும் இருக்கிறது. அவை ஒப்பந்தம், அரசாங்க அக்ரிமெண்ட் போன்றவையும் இருக்கும். குடும்ப விஷயத்தில் நீங்கள் விலகி இருப்பதோ அல்லது வெறுப்புடன் இருப்பதோ கூடாது. கல்வி உயர்வு இருக்கிறது. கவலை வேண்டாம். குடும்பத்திற்கு நாகரிகப் பொருட்கள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். கணவன், மனைவி உறவில் இனிமையான போக்கே தொடர்ந்து இருந்துவரும். காடு மலைப் பகுதி பிரயாணத்தை மேற்கொள்வதும்கூட உண்டாகும். வழக்கு வகையில் செலவுகள் சிலருக்கு தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். வார்த்தையோடு நின்றிருந்த விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும். குறிப்பாக நாகரிகப் பொருட்கள் வாங்குவது, கட்டட சீரமைத்தல், கலைப் பொருட்கள் வாங்கி ரசித்தலும் உண்டாகும். கலைத்துறையினர் ஆடல் பாடல் கலைத்துறை தேர்ச்சி உடையவர்களுக்கு இம்மாதம் சிறப்பு நன்மையுடையதாக இருக்கும். குடும்பத்து சொத்துகள் சம்பந்தமான பிரச்சினைகள் தீர்வுகாண முடியாமல் சிலருக்கு செலவுகளை கொடுத்துகொண்டு இருக்கிறது. சகோதரி, சகோதரன் வகையில் ஒருவிதமான இடைவெளி இருந்துகொண்டே தான் இருக்கிறது. புத்திரன் ஆரோக்கிய பாதிப்பு மருந்து செலவும் இருக்கும். உத்தியோகப்பிரிவு ஆண்த பெண்களுக்கு ஊர்விட்டு வேறு ஊர் போகும் அவசியம் உண்டாகும். சத்ருக்கள் பலன்தான் மிகுந்து இருக்கின்றன.

### ரிஷபம்
**(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)**

உங்கள் ராசிக்கு மறைந்த சூரியன்- செவ்வாய், புதன், சக்கிரனும் சேர்ந்த 6இல் என்றாலும் சுக்ரன் ஆட்சி சூரியன் ஆட்சி, சூரியன் நீசம் ஏதாவது செய்துவிடுமோ என்ற பயம்தான். விருந்து உண்பது நிற்காது. கணவன், மனைவி உறவு கண்ணியம் மிக்கதுதான். தன நிலையில் தன்னிறைவு உடையவர்கள் நீங்கள் என்று நினைக்கும் சூழ்நிலை உருவாகும். செய்தொழில் வழியை சிறப்பிக்க விளையாட்டு போன்ற வழிகளில் சிறு சிறு நன்மைகள் இக்காலம் மத்தியிலிருந்து இருக்கும். வெளியூர் கடிதம் சுப விஷயங்களைத் தாங்கி வரும். கடன் பிரச்சினைகளும் வழக்கு விவகாரமும் மந்தமாகி விட்டன. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு விடுமுறை அவசியமாகும். வைக்கப்படும் பூமி, வாகனம் வாங்குவது அல்லது அவ்வழி முதலீடு செய்வதும் இப்போது உண்டாகும். கலைப்பிரிவினர்கள் தொழில் சம்பந்தமாக அலைச்சல் உடையவர்களாக இருப்பர். வெகுதூரம் பிரயாணம் மேற்கொள்வதும் இருக்கும். இப்போது கௌரவப் பதவியினைப் பெறுதலும், வெளிவட்டார பாராட்டுகளும் உண்டாகும். மேலும் இப்போது பெரிய திட்டங்களை உருவாக்கும் நேரமிது. தூரத்து மனிதர்களும் உதவியாக இருப்பர். அரசாங்கத்திலிருந்து சில உத்தரவை எதிர்பார்ப்பவர்களுக்கு மனத்திருப்தியாக வந்துசேரும். மறைமுகத் தொழில் மூலம் வருவாய் பெற்றவர்களுக்கு இப்போது அவ்வழி வெளிப்படை தொழிலாக தனவரவைக் கொடுக்கும். மருத்துவச் செலவுகளும் சற்று கூடுதலாக இருக்கின்றன. பல்நோய், மூக்கு பாதிப்பும் உண்டாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு அரசாங்க வகையினால் பாதிப்பு, உடனிருப்பவர்களால் அதிருப்தியான போக்கும் இருக்கும். தொழில் கூட்டு மனிதர்களிடம் புதிய ஒப்பந்தம் உண்டாவது குறிப்பாக நன்மையாகும். அரசியல் உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகளை முடிக்கும். இதன்மூலம் வழக்கு வகையும் நன்மை ஆக முடியும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகிவிடும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகள் நினைத்தபடி பலன் தராது. உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் இடப்பெயர்ச்சி, இலாகா மாறுதலும் உண்டாகும். எழுத்து மூலம் செய்யும் முயற்சிகள் இப்போது பயன்படாது. தேக உஷ்ண அசௌகரியம் சிலருக்கு மூலச் சூட்டினால் பாதிப்பு ஏற்பட்டுவிடும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு செய்தொழில் மூலம் நல்ல போக்கு கௌரவ உயர்வு பாராட்டுகளும் கொடுக்கும் காலமிது. உயர் அதிகாரி முதல் கீழ்நிலை மனிதர்கள் வரை எல்லா வகையிலும் இணக்கமான போக்கில் இருப்பது மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதுமனை புகுதல், கட்டட சேர்க்கையும் சிலருக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளாகும். குடும்ப வகையிலும் மனத் தெளிவான போக்கு இருந்து வரும். ஆனால் மருத்துவச் செலவுதான் கடுமையாக இருக்கும்.

### மிதுனம்
**(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)**

இப்போது குரு மாறி இருப்பது நன்மை இல்லைதான் என்றாலும், ஆரம்பத்தில் சுயசாரம் பெற்றவன் என்பதால் பயமின்றி செயல்பட தயக்கம் வேண்டாம். பாதிப்பு கொடுக்காது. வழக்கு வேகமும் இல்லை. பழைய நண்பர்கள் சிலரை சந்திப்பதால் புதிய பிரச்சினைகளை தீர்க்க வழி பிறக்கும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு கவனமறதியினால் தவறு ஏற்படுவது, மேல் அதிகாரிகள் சீற்றத்திற்கும் வாக்கு வாதத்திற்கும் ஆளாகுதல் போன்றவை உண்டாகும். குழந்தைகள் வகை சிறு சலசலப்பு இருக்கத்தான் செய்யும். சகோதர வகையில் கவனமாக செயல்படுவதுதான் நல்லது. இப்போது சுக்கிரன் கலைப்பிரிவு பெண்களால் கடைசிகட்ட நன்மைகள் இருக்கின்றன. குழந்தைகள் கல்வி, ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டியது. தூரத்து உறவினர் இல்லங்களுக்கு போய் விசேஷங்களில் கலந்து கொள்வது உண்டாகும். குடும்பத்திற்கு நாகரிகப் பொருட்கள் வாங்குவது போன்ற நன்மைகளும் உண்டு. நினைத்ததை சாதனை புரிந்திடுவீர். தனக்கு எதிராக இருந்தவர்களை மாற்றல் மூலம் மற்றவர்கள் அன்பைப் பெறுவதும், மறைத்து வைக்கப்பட்ட காரியங்கள் சிலவற்றை வெளிக்குக் கொண்டுவருதல் மனத்திருப்தியளிக்கும். அமைதிக்கும் காரணமாகும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி நெருக்கடி இருக்கும். பக்கத்தில் உள்ளவர்கள் பகை உணர்ச்சியோடு இருப்பர். சிலர் அயல்நாட்டு கடிதத் தொடர்பில் அவசரப் பிரச்சினை உடையவர்களாக இருப்பர். தனவரவு, நாகரிகப் பொருள் சித்தி, வாகனம் மற்றும் போன்றவைகளை உண்டாக்கும். வழக்கு பாதிக்க வாய்ப்பில்லை. குடும்பத்தில் சொத்து விவகாரம் இருந்தவர்களுக்கு வேகம் இல்லை. நல்ல உணவு சித்தி, நல்ல உடை, மகிழ்ச்சியான போக்கும் விருந்துண்பதும் குறிப்பிடத்தக்கது. கார், லொறி போன்ற வாகனம் வைத்துத் தொழில் நடத்துகிறவர்களுக்கும், கான்ட்ராக்ட் போன்ற தொழில் செய்பவர்களுக்கும் இது வளர்ச்சி தரும் மாதம் என்பதில் சந்தேகமில்லை. சிலருக்கு வழக்கு கடனும் இருந்து கொண்டுதான் இருக்கும். ஆரோக்கியம் சிறு சிறு பாதிப்பு தவிர, மிகப்பெரிய பாதிப்புகள் ஏதும் இல்லை. இந்த ராசி மாணவர்களுக்கு கல்வி உயர்வு குறித்தபடியே இருக்கும் என்றாலும் கவனித்துப் படிக்கவேண்டும். பிரயாணங்களும் இடம்பெறும். உத்தியோகப்பிரிவினர்கள் செய்தொழில் வழியில் உயர்வு இருக்கும். அரசியல் மனிதர்கள் மூலம் எதிர்பார்த்த அவசர உதவியை அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மூலமே முடிக்கப்பெறுவீர்கள். புண்ணியஸ்தல பிரயாணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு, லாட்டரி போன்றவைகளின் மூலம் கடந்த மாதமே உயர்வான பலன்கள் ஆரம்பித்துவிட்டாலும், இந்த மாதமும் இலாகாவில் திருப்தியான மாற்றங்களை செய்யக்கூடும். கௌரவச் செலவுகளை அதிகமாக உண்டாக்கும். பிரயாணம் எதிர்பார்த்தது பெருமைக்குரிய நண்பர்களை சேர்த்து வைக்கும். தொழில் முக்கியத்துவம் இல்லை என்றாலும், பணம் முக்கியத்துவம் இருக்கிறது. மேலும் உறவினரும் நண்பர்களும் உறுதுணையுடன் செயல்படுவர்.

### கடகம்
**(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)**

வெற்றி உறுதியாகும். புத்திரர், புத்திரியர்கள் முன்னேற்றம் பாதிக்கப்பட மாட்டாது. புகழ்ச்சிக்காக செலவு செய்யும் காலமிது. செவ்வாய் விபத்து பயத்தை உண்டாக்குபவன் என்பதால் இடறி விழுதல், இடதுகால் கையில் காயம் போன்றவைகளை உண்டாக்கும். சனி தன சேர்க்கை, வாகன சேர்க்கை, வழக்கு வெற்றியையும் உண்டாக்கும். புண்ணியஸ்தல பிரயாணம் தெய்வ வழிபாடுகளில் சிலருக்கு முக்கியத்துவம் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் வெளிச்சமாகவே இருக்கிறது. கடனும், வழக்கும் இல்லாமல் இல்லை. ஆனால் பாதிக்க முடியாது. சிலர் புது இல்லம் குடிபுகுதல், புது உடைகள் அணிகலன் சேர்க்கையுடையவர்களாகவும் விளங்குவர். நல்ல உணவு கொள்வது, உல்லாசப் பிரயாணம் மகிழ்ச்சியான செய்திகளை அறிதலும் உண்டாகும். தொழில் முயற்சியை மற்றவர் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். பழைய வாகனம் புதுப்பித்தலும் புதிய வாகனம் வாங்குவது போன்றவையும் உண்டாகும். நீங்கள் முன்பு குறையாக விட்ட வேலைகளை இப்போது சந்திக்க வேண்டி இருக்கும். பிற இனத்தவர்கள் சிலர் பழைய நண்பர்கள் சிலரை இப்போது சந்திக்க வேண்டிய அவசியம் அவசரமும் உண்டாகிவிடும். புதிய முயற்சிகள் சில இடம்பெற்றிருக்கின்றன. புகழ் கௌரவ உயர்வுக்கும் இது மிக முக்கியம். அயல்நாட்டு தொழில் வழி மனிதர்கள் சந்திப்பு புதிய ஒப்பந்தத்திற்கு வழிவகுக்கும். பழைய நண்பர்கள் சிலர் சில வகையில் ஒத்துழைப்பு கொடுப்பர். குடும்ப வகைக்கு பூமிப் பொருள் அல்லது வீடு பொருள் சேர்க்கும் இந்த செவ்வாய் சார குரு குடும்பத்துடன் புண்ணியஸ்தல பிரயாணத்தை மேற்கொள்வதும் உண்டாகும். தரும ஸ்தாபன அமைப்புக்கு நிதி உதவி செய்வது போன்றவையும் உண்டாகும். புத்திரி வகையில் சில பிரச்சினைகள் உண்டாகும். இதனை இதமாகக் கையாள வேண்டும். இது கௌரவப் பிரச்சினையுங்கூட. ஒருவேளை புத்திரன் வகையாகவும் இருக்கலாம். அரசியல் மனிதர்களின் தொடர்பு உங்கள் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும். சிலருக்கு உணவுப் பொருள், ஹோட்டல் தொழில் போன்றவை அமைக்க வாய்ப்பு உண்டாகும். அதன்மூலம் பெரிய தன வருவாயும் உண்டாகும். மேலும் சிலருக்கு உணவுப் பொருளிலேயே நீர் உடைய திரப்பொருளால் வருவாய் உண்டாகும். நாகரிக வாகனம் மாற்றி அமைத்தல் விஷயங்களில் அல்லது பழுதுபார்ப்பதும் அவசியம் ஆகும். தாய் ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பண நெருக்கடி இருக்கும். குடும்பப் பொருட்களை இப்போது மீட்பீர்கள். தன சேர்க்கை உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற உதவியாக இருக்கும். மூன்றாவது மனிதர்களின் தலையீடு உங்கள் முயற்சியை பலப்படுத்தும்.

### சிங்கம்
**(மகம், பூரம், உத்தரம் 1)**

இப்போது 7இல் ராகும்த ஜன்மத்து கேதுவும்தான் மிக மிக முக்கியமாகிவிட்டன. குடும்பத்தைக் கவனிக்கவும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு திருப்தி இல்லாத இலாகா மாற்றம் உண்டாகும். இதனால் ஆரம்பத்தில் மனம் அமைதியற்று இருந்து பின் தெளிவடைந்துவிடும். சிலசமயம் வேறு காரியங்களுக்காக நீங்கள் மேல் அதிகாரிகளைச் சந்திக்கவேண்டிதான் இருக்கின்றன. சுமூகமான பேச்சுக்கள் இடம்பெறும். இதற்கு மேல் உங்கள் சோர்வுகள் நீங்கிவிடும். கணவன், மனைவி பிரச்சினைகள் உங்களுக்குள்ளிருந்தே தீர்ந்துவிடும். வெளியாரின் தொடர்பு ஈடுபாட்டுக்கு அவசியமில்லை. இப்போதுதான் வழக்கு கடன் பிரச்சினைகள் நீங்கும். குடும்பத்தில் சிலருக்கு பாகப்பிரிவினை சம்பந்தமான பேச்சுக்களும் இடம்பெறும் என்பதால் நிதானமாகச் செயல்பட வேண்டும். பட்டாடை, பழைய ஆபரணச் சேர்க்கையும் இந்தப் பிரிவு பெண்களுக்கு இருக்கும். பதவி உயர்வு சம்பந்தமான பேச்சுக்களும் இடம்பெறும் என்பதால் நிதானமாகச் செயல்பட வேண்டும். சிலர் வீடு கட்டும் முயற்சியில் இருப்பர் இது முக்கிய நன்மையாகும். புத்திரர் புத்திரியர்கள் கல்வி உயர்வுக்கு குறை இல்லை. கலைப்பிரிவினர்களுக்கு கண்ணியத்தை காக்க கொடுக்கல், வாங்கலை சீர் அமைக்க இது ஒரு வாய்ப்பான மாதம். சிலர் ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடுவது தன ஆதாயமும் உண்டாகும். உங்கள் போக்கு மற்றவர்களால் பாராட்டு பெறக்கூடியதுதான். சில வழி நன்மை இல்லைதான் என்றாலும் குரு பலம் இவர்களின் பிற்போக்கு நண்பர்கள் ஆதரவு நல்கிடும் என்பதில் சந்தேகம் இல்லை. செய்தொழில் வகையில் நாட்டம் செலுத்துங்கள். லாட்டரி, போட்டி, பந்தயத்தை நம்பி ஏமாற வேண்டாம். குலம் பற்றி பயம் வேண்டாம். இனி தேக சுகம் அதிகரிக்கும். உடல் வீரிய விருத்தியுடையவராக விளங்குவீர்கள். கடன் தொல்லை இருக்கும். ஆனால் வேகமில்லை. செவ்வாய் குடும்பத்திற்கு தேவைகள் இருக்கும். சுப விஷயங்கள் நடைபெறும். கணவன், மனைவி உறவு படிப்படியே நன்றாக இருக்கும். மாணவ, மாணவிகளுக்கு நல்ல காலமல்ல என்பதால் தேர்வுக்கு கவனித்துப் படிக்கவேண்டும். போட்டி, பந்தயங்களில் அனுகூலம் ஏற்படும். குடும்பத்துப் பிரச்சினைகள் அனைத்தும் உங்களுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்கிறது. கடன் இருந்தும் வழக்கு பாதிப்பு இல்லை. நண்பர்கள், உறவினர்கள் இல்லமதில் நடக்கும் சுப விசேடங்களில் கலந்துகொள்வது, விருந்துண்பது உண்டாகும். சிலருக்கு குடும்ப சூரியனும் 2இல் குருவும் திருமணம் போன்ற சுபங்களை முடித்து வைத்துவிடுவர். இது ஆண், பெண் இரு பிரிவினருக்கும் உரியதே. மாணவ, மாணவிகளுக்கு தேர்வு பாராட்டைக் கொடுக்கும். இயந்திரப் பொருட்கள் வாங்குவது அதன்மூலம் ஆதாயமும் உண்டாகும். மறைந்திருந்த ரகசியங்கள் சில அறியும் வாய்ப்பும் உண்டாகும். எழுத்து வகை உத்தரவைப் பெறத்தக்கவர்கள் உத்தியோகப் பிரிவினர்கள் தன் மீது இருந்த தவறான கருத்தை மாற்றி அமைத்து மகிழ்ச்சி அடையத்தக்கவர்கள். அரசாங்கப் பிரிவினர் உங்கள் இயக்கத்திற்கு உறுதுணையாக நிற்பர் என்பதில் சந்தேகம் இல்லை.


### கன்னி
**(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2)**

இப்போது குடும்பத்து குரு சிறப்புதான். ஜென்மத்தில் உள்ள சூரியன் நீசம், அதேநேரம் சுக்கிரன், புதன், செவ்வாய் ஜென்மத்தில் அமர்ந்திருப்பது சிறப்புதானே. பழைய நண்பர்கள் சிலர் இப்போது பக்க பலமாக இருப்பர். தொழில் ஒரே சீராக இருக்கும். தன ஆதாயம் ஓர் அளவாகவே இருக்கும். குடும்பத்தில் இருந்த பொறுப்புகளிலிருந்து விலகி நிற்கவேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகும். குழந்தைகள் வகை கடுமையான செலவுகள் இடம்பெறும். உத்தியோகப்பிரிவினர்களுக்கு பதவி உயர்வு அல்லது மாற்றம் குறித்துத் தகவல் கிட்டும். பழைய நண்பர்கள் சிலரை சந்திப்பதில் தனி அக்கறை காட்டவேண்டியது இருக்கும். குடும்ப சொத்து விவகாரத்தில் நல்ல திருப்பத்தைக் காணலாம். நீங்கள் மிகவும் விறுவிறுப்பாகக் காணப்படுகிறீர். வெளியூர் கடிதங்களும் உடனுக்குடன் பதில் அளித்தல் நன்மைக்கு வழிகோலும். நண்பர்களாக இருந்து விலகி இருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேருவர். செய்தொழில் பழைய ஸ்தாபன அமைப்பை பெற்றதாக விளங்கும். உத்தியோகப்பிரிவினர்களுக்கு இது முக்கியத்துவம் உடைய மாதமாக இருக்கின்றன. இடமாறுதல், தகவல் அறிதல், பதவி மாற்றம் போன்றவைகளும் உண்டாகும். தனக்கு எதிராக இருந்தவர் இப்போது ஒத்துழைப்பைக் கொடுப்பர். உங்கள் பைகல்களைச் சற்று எச்சரிக்கையுடன் வைப்பது நல்லது. மறைமுக சத்ருக்களும் இருக்கின்றனர். பெண்களுக்கு குடும்பத்திற்கு நாகரிக பொருள் சித்தி சந்தோஷச் செய்தியைப் பெறுவதும் அவசியமாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உடனிருப்பவர்களை சரிக்கட்டி போவதுதான் சிறப்பு. இல்லையேல் இப்போது நீங்கள் பலமிழந்தவர்களே. பழைய கடன்கள் சிலது பயமுறுத்தல் செய்யும். அயல்நாட்டு கடிதத்தொடர்பில் முன்னேற்றமான போக்கும் உருவாகும். எதிர்பார்க்காத சில காரியங்கள் வந்து முளைக்கும். அலுவலகத்தில் எழுத்து வகையில் பதில்கூற வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகும். குடும்பத்தில் குழப்பத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டாம். இப்போது சிறு பிரச்சினையும்கூட பெரியதாக ஆகிவிடலாம். சேமிப்பில் இருந்த பணம் செலவாகும் காலமிது. பண விஷயத்தில் தட்டுப்பாடு இருந்து குழந்தைகள் மனைவி இந்த வகையில் சிறு சிறு சச்சரவுகள் இடம்பெறும். தெய்வ வழிபாடு மன அமைதியை உண்டாக்கும். மேற்கு திக்கு மனிதர்களின் வருகை பேச்சு வகையில் திருப்தியளிக்கும். உத்தியோகப்பிரிவினர்கள், தொழிலாளர்களுக்கு இது சோதனையான காலமாகும்.

(தொடரும்...)

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 84

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'ஆசை' யில் அலற வைத்த . வர். 'செல்லமாய்' பெண்களைச் சீண்டிப் பார்த்தவர், கொஞ்சம் அழகான வில்லன். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 02 ஆம் திகதிகது முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 84**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா! பரிசுப் போட்டி இல:-84

படத்தில் உள்ளவரின் பெயர் :-..........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-..........................

அனுப்புபவரின் முகவரி :-..........................

..........................

..........................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 82

**சரியான விடை**





நடிகர் ராமராஜன்

இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 82இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்

முதற் பரிசு :- லோ.கீர்த்திகா
கண்ணாபுரம்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு :- து.நக்கீரன்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

மூன்றாம் பரிசு :- க.அனுஷன்
114, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


### சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:

வ.சிவாஜி, கரணவாய்கிழக்கு. மு.சுயந்தி, உரும்பிராய். J.றமா, நீர்வேலி. இ.மகாநாதன், யாழ்ப்பாணம். இ.சுபாஷினி, சுன்னாகம். J.C.யெறால்ட்போட், யாழ்ப்பாணம். கே.அரசேஸ்வரன், நல்லூர். இ.மேகநாதன், மீசாலை. யோ.சிவாஜினி, மட்டுவில். ச.தேனுசா, யாழ்ப்பாணம். கு.டயந்தன், கொட்டடி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். திருமதி. S.பாக்கியநாதன், சங்கானை. யோ.ஜீவிதன், உரும்பிராய். ம.மைதிலி, கோண்டாவில். L.அபிராமி, வல்வெட்டி. மா.அருந்ததி, பருத்தித்துறை. வி.இளங்கோ, கோப்பாய். வி.விதுஷன், கொக்குவில். து.நட்சத்திரா, நல்லூர்.

# விஷத்தன்மை கொண்ட வண்ணத்துப்பூச்சி

**மோ**னார்ச் என்னும் வண்ணத்துப்பூச்சி மிகவும் அழகாக இருக்கும். வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, நியூசிலாந்து மற்றும் தென் ஆஸ்திரேலியாவில் இந்த அழகிய வண்ணத்துப் பூச்சிகள் காணப்படுகின்றன.

அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து இருப்பது இயற்கைதானே. இந்த அழகிய வண்ணத்துப் பூச்சிகள் மிகவும் விஷத்தன்மை உடையது. இது மிகவும் பெரிதாக இருக்கும். அதேசமயம் மெதுவாக பறக்கும். இது கம்பளி பூச்சி பருவத்திலேயே விஷத்தன்மை உடையதா



கக் காணப்படுகிறது. இதற்குச் காரணம் மில்க் விட் எனப்படும் தாவரங்கள்தான். இந்த தாவரங்கள் மிகவும் விஷத்தன்மை வாய்ந்தவை. இவற்றைச் சாப்பிட்ட பல உயிரினங்கள் இறந்துவிடுகின்றன.

இந்த மோனார்ச் வண்ணத்துப் பூச்சிகளைத் தவிர, இவை தாவரத்தின் இலைகளைச் சாப்பிட்டும் இதன் விஷம் இந்த வண்ணத்துப் பூச்சிகளை மட்டும் தாக்காது. ஆனால் இந்த விஷம் கம்பளிப் பூச்சி பருவத்திலேயே வண்ணத்துப் பூச்சிக்குள் இறங்கி விடுவதால் இவைகளும் விஷத்தன்மை உடையனவாக மாறிவிடுகின்றன.


ஒரு பறவை இந்த வண்ணத்துப்பூச்சியையோ அல்லது இதன் கூட்டுப்புழுவைக் கொத்திக் கொண்டு போனவுடனேயே விஷத்தினால் தாக்கப்பட்டு மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும். அதன் பிறகு இப்படிப் பட்ட வண்ணத்துப் பூச்சிகளைப் பறவை தொடவே தொடாது. இந்த மோனார்ச் குளிர் காலத்தைக் கழிப்பதற்காக வட அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுவிடும். வசந்தகாலத்தில் திரும்பவும் வடஅமெரிக்காவிற்கே பறந்து செல்லும் வழியிலேயே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

# 7 தங்கப் பதக்கம்

ஒரு சின்ன வேலைக்காக குனிந்து நிமிர்வதையே சிரமமாக கருதுவோர் மத்தியில் ஒரு பெண் தனது உடலை வில்லாக வளைத்து சாதனை புரியும் ஜிம்னாஸ்டிக்கில் சாதனை புரிந்திருக்கிறாள்.


அந்தச் சாதனைப் பெண்ணின் பெயர் வீராகேஸ் லாஸ்கா. 1942 ஆம் ஆண்டு செக்கோஸ் லோவேக்கியா நாட்டில் பிறந்தவர்.

இவர் 1964ஆம் ஆண்டு ஜப்பானில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஜிம்னாஸ்டிக் பிரிவில் 3 தங்கப்பதக்கங்களைப் பெற்றார். பின்னர் 1968 ஆம் அண்டு மெக்ஷிகோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 4 தங்கப் பதக்கங்களைப் பெற்று உலகிலேயே ஒலிம்பிக்கில் ஜிம்னாஸ்டிக் போட்டியில் பெண்கள் பிரிவில் அதிக தங்கப் பதக்கங்களை வென்ற வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார்.




1968ஆம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பெற்ற 4 தங்கப் பதக்கங்களில் 1 பங்கிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 88




*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 88**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

*முழுப்பெயர்* :- ..........................................

*முகவரி* :- ..........................................

..........................................

..........................................

*இங்கே வெட்டுக* ----------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 02ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)தன்னலம் கருதாச் செயல். (4)சிறப்பு - இப்படியுமழைக்கலாம். (5)ஒளி தரும் சாதனம். (6)சந்திரனைக் கண்டதும் மலரும் மலர். (8)சில பெண்களின் திருமணத்திற்கு இது தடையாக இருப்பதுண்டு. (9)பூமி.

### மேலிருந்து கீழ்

(1)'திரைகடலோடியும்' இதைத் தேடவேண்டும் என்பர். (2)மருந்துச் சரக்குகளிலொன்று (காய்) (3)துணையை இழந்தால் தானும் இறக்குமாம் இந்தப் பறவை. (6)முடிவு (7)இதை மதியால் வெல்லலாம் என்பர்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 86 இன் விடைகள்**

### இடமிருந்து வலம்

1.மனோவசியம் 4.வஞ்சினம் 5.கப்பி 7.வாஞ்சை 8.சாகுபடி

### மேலிருந்து கீழ்

1.மகாவலிகங்கை 2.சின்னம் 3.பிரயாசை 6.பிறை 7.வாக்கு

### பரிசுபெற்றோர் பெயர் விபரம்

முதற் பரிசு :- தெ.சிவகௌரி
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

இரண்டாம் பரிசு :- V.நிசாந்தன்
நாவாந்துறை தெற்கு,
நாவாந்துறை.

மூன்றாம் பரிசு :- இ.ரஞ்சினி
அரியாலை,
யாழ்ப்பாணம்.

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறுவோரின் பெயர் விபரம்:

J.C.யெறால்ட்போட், யாழ்ப்பாணம். ஏ.வாசவி, அரியாலை. ஞா.இராஜோதயன், கோப்பாய். ச.தேனுசா, யாழ்ப்பாணம். ம.மைதிலி, கோண்டாவில். வ.சிவாஜி, கரணவாய் கிழக்கு. யோ.சிவாஜினி, சாவகச்சேரி. க.குருநாதன், கோண்டாவில். வே.குமாரசுவாமி, கரவெட்டி. பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. திருமதி.இ.பாலசிங்கம், சுன்னாகம்.

# சாதனைப் பூங்கா



**க**னடாவில் அல்பர்டா என்ற இடத்தில் அமைந்துள்ள கேலக்ஷி லேண்டும் உள்ளரங்க பொழுதுபோக்கு பூங்கா உலகிலேயே மிகப்பெரிய உள்ளரங்க பூங்கா என்ற பெருமையைப் பெற்றுள்ளது. 37,160 சதுர மீற்றர் சுற்றளவு கொண்ட இந்தப் பார்க்கில் மிகப் பெரிய விளையாட்டுத் திடல்களும், மனதைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ராட்டினங்களும் இடம்பெற்றுள்ளன.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

## என் உள்ளம்

81



எனக்கு இளமையிலிருந்தே பிறவித் துயரத்தைக் களைய வேண்டும் என்ற ஆர்வம் வேரூன்றி நின்றது. பற்றுதான் பிறவிக்குக் காரணம்.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

என்பது நம்மாழ்வார் திருவாக்கு ஆதலால் எந்தப் பொருளிலும் பற்று இருக்ககூடாது என்று எண்ணி வாழ்பவன் என்னைப் பகைக்கின்றவனும் வாழ்க என்று எண்ணுவேன்.

"வைததனை இன்சொல்லாக் கொள்வானும்" என்ற திரிகடுகப் பாடலை அடிக்கடி நினைந்து கொள்வேன்.

காந்தியடிகளின் சத்திய சோதனை என்ற நூலை அடிக்கடி படித்து அதன்படி ஒழுக வேண்டுமென்று சிந்திப்பேன்.

பிறரிடத்தில் ஒரு பொருளை இனாமாகப் பெற்றால் அது பிறவியைத் தரும் என்று எண்ணுபவன். உழைத்துத்தான் ஒருவன் வாழ வேண்டும். "போனகம் என்பதுதான் உழந்துண்டல்" என்பது ஔவையார் வாக்கு.

ஒவ்வொரு உயிர்களும் துன்பம் இன்றி இருக்கவேண்டும் என்றுதான் எண்ணுகின்றன. துன்பங்கள் பல. "பல துன்பம் உழன்று கலங்கிய சிறியன்" என்பார் அருணகிரிநாதர்.

துன்பங்கள் அனைத்துக்கும் தலையாயது பிறவித் துன்பந்தான். பத்துத் திங்கள் நெருக்கமான கருப்பையில் கிடந்து அடையும் துன்பத்தை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் உள்ளம் உலைகின்றது. உண்மையில் அறிவு படைத்த ஒருவன் பிறவித் துன்பத்துக்குத்தான் அஞ்சவேண்டும். நாம் செய்யும் வினைகளால்தான் பிறவிகள் எய்துகின்றன. ஆதலால் பாவஞ்செய்ய அஞ்சவேண்டும். பிறவித் துயருக்கு அஞ்சும் இயல்பு எனக்கு இளமையிலிருந்தே திருவருளால் எய்தியது. ஆதலால் நெஞ்சாரப் பாவஞ்செய்யக்கூடாது என்ற எண்ணமும் அவனருளால் எய்தியது.

நான் தனிமையில் இருக்கும்பொழுது "கந்தவேளே! மற்றும் ஒரு தாயின் வயிற்றில் நான் புகுதாதவண்ணம் காத்தருள வேண்டும்" என்று முறையிட்டுக் கண்ணீர் வடிப்பது உண்டு. நான் அறிவு தோற்றிய நாள்தொட்டு முருகப்பெருமானை உபாசித்து வருபவன். ஆனால் எந்த மூர்த்திகளிடத்திலும் வெறுப்பு இல்லாதவன்.

எனக்கு அஜீரணம் என்பது என்ன என்று இன்றுவரை தெரியாது. காரணம் அரசர் வீட்டு விருந்தானாலும் அளவோடு உண்பவன். ஒரு முஸ்லீம் அன்பர் என்னைப் பார்த்து "பசியெடுத்தபின் கையை வாய்க்குள் வைப்பவனும், பசியடங்குவதற்கு முன் கையை வாயை விட்டு எடுத்துக்கொள்பவனும் நோய்வாய்ப்பட மாட்டான்" என்று கூறினார். இதை நான் இப்பொழுதும் நினைவில் வைத்திருக்கின்றேன்.

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு"

என்ற திருக்குறளைக் கடைப்பிடிப்பவன். நான் விரிவுரையில் உணவு வகைகளைப் பற்றிச் சுவையாகச் சொல்லும்பொழுது பலர் இத்தனையும் இவர் உண்பாரோ! என்று எண்ணிக் கொள்ளுவார்கள். ஆனால் நான் எப்பொழுதும் எளிமையாக உண்பவன். இதுபற்றி ஒரு நிகழ்ச்சி.

ஒருசமயம் மன்னார்குடிக்கு விரிவுரை செய்யப்போயிருந்தேன். மன்னார்குடியில் பெருநிலக்கிழார் திரு பாலகிருஷ்ண முதலியார் என்னை வரவழைத்திருந்தார். அவர் இல்லத்தில் தங்கியிருந்தேன். அவருக்கு என்னிடம் பேசுவதற்கு அச்சம், என்னுடன் பிடில் வாசிக்க வந்திருந்த அன்பர் சேதுராமன் என்பவரை அணுகி "சுவாமிக்கு என்ன உணவு நிரம்பப் பிடிக்கும்?" என்று கேட்டாராம். சேதுரா மன் கூஷசுவாமிக்கு மிகவும் பிடித்தமானவை மோர், ரசம், துவையல், கீரை இவைகள்தான். வடை, பாயாசம் செய்யுங்கள் நாங்கள் சாப்பிடுவோம்" என்று கூறினாராம். ஆதலால் உணவு வகையில் கட்டுப்பாடாக இருப்பவன். யாரையும் எளிதில் நம்புபவன். பிறருடைய குற்றம் குறைகளை ஆராய்ந்து பார்ப்பதோ, பேசுவதோ கிடையாது.

எனக்கென்று பெரும்பொருள் சேர்த்து வைத்துக்கொள்ளாதபடியால் மனதில் எப்பொழுதும் ஆறுதல் நிலவுகின்றது யாரிடத்தும் கடிந்துபேசுவதில்லை.

உபவாசம் உடல் நலத்தைத் தரும். அதனால் கந்தசஷ்டி 6நாள், மாத சஷ்டிகள், மகாசிவராத்திரி கார்த்திகைச் சோமவாரம், அருணகிரிநாதர் ஆராதனை இந்த நாட்களில் உபவாசம் இருந்து இறைவனை வழிபடுவேன்.

என்னிடத்தில் உதவி பெறாதவர்கள் என்னிடம் எப்பொழுதும் அன்பாக இருக்கிறார்கள். என்னிடத்தில் பெரிய அளவில் உதவி பெற்றவர்கள் மேலும் உதவி செய்யவில்லையே என்று என்னை வெறுக்கின்றார்கள். இது என் வாழ்க்கையில் தெரிந்துகொண்ட அநுபவம்.

எனக்கு 25வயது முதல் இன்றுவரை நான் விரிவுரைசெய்யாத நாளில்லை. மழை வந்து விரிவுரை நின்றிருக்கும். என்க்குச் சுகக்குறைவு என்று ஒரு பொழுதும் விரிவுரை நின்றதில்லை. பிற மதங்களை நான் எப்பொழுதும் பொறுப்பதில்லை. என்னுடைய உள்ளத்தில் நீங்காது நிலவும் இரக்கத்தைச் சிலர் தங்களுக்குக் கருவியாகக் கொண்டு என்னைப் பெரிதும் ஏமாற்ற ஏமாந்து நான் பெரிதும் இடர்பட்டிருக்கின்றேன். கருணையில் விளையும் இரக்கம் இடர் தருகிறது என்பதை உணர்கின் றேன்.

இறைவன் திருக்கோயில் மட்டும் இருக்கின்றான் எனறு எண்ணக்கூடாது. நம் உள்ளத்திலே பிரியாது இருக்கின்றான்.அதனால் 'பிரான்' என்று இறைவனை அழைக்கின்றோம். எண்ணத்திலும், சொல்லிலும் இறைவன் இருக்கிறான்.

'வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானை ' 'மனத்தாக்கத்தான் தலைமேலான்' என்கிறார் அப்பர் பெருமான். சொல்லிலும் உள்ள என்கிறார் பிரஹலாதர். ஆதலால் நம் எண்ணங்களும் , சொல்லும்,செயலும் தூயவனாக இருக்க வேண்டும். அருளறியப் பாவங் கள் செய்தல் கூடாது. 'எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்' என்ற மணிவாசகத்தின்படி நாம் எண் ணில்கோடி பிறவிகளை எடுத்து எடுத்து அயர்ந்து போனோம். இனிப் பிறவாமையைப் பெறவேண்டும்.

பிறவாதவனும் இறவாதவனும் ஆகிய எந்தை கந்தவேளிடம் நான் வேண்டுவது பிறவாமை ஒன்றையேதான். ஒவ்வொருநாளும் வழிபாட்டில் பிறவித் துயரை நினைந்து கண்ணீர் மல்கி அப் பரமபிதாவை வேண்டுகின்றேன். பிறவாமை கருதியே உள்ளத்தில் ஒழுக்கமும் அமைந்தது. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் விழுப்பொருள் ஒழுக்கம் இன்றி உயர்வு ஏற்படாது.

'நாம் இறைவனுடைய சந்நிதியில் இருக்கின்றோம். அவன் நம்மை ஒவ்வொரு கணமும் பார்த்துக்கொண்டிருக்கிறான்' என்று அடியேன் கருதுகின்றேன். அதனால் அவன் அருளறிய உள் ளத்தில் பாவ நினைவுகள் எழுவதில்லை. இந்த ஒரு நிலையை எல்லோரும் அடைதல் வேண்டும் என்றே எழுத்தாலும் சொல்லாலும் இடையறாது தொண்டு புரிகின்றேன்.

எனவே ஒவ்வொரு மனிதனும் நம் உள்ளத்தில் இறைவன் உறைகின்றான் என்று எண்ணி, அவனருளறியத் தீவினை புரியாது, நல்வினை பயன் கருதாமல் புரிந்து, பிறவித் துன்பத்தை அகற்றுதல் வேண்டும். இதுவே என் வேண்டுகோளும் உள்ளமும் ஆகும்.

15-10-1979இன்றுவரை என்னை நோயின்றி சமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்யுமாறு கருணை புரிந்த முருகப்பெருமானுடைய திருவருளைச் சிந்தித்து வந்திருக்கின்றேன். என்னுடைய வாழ்க்கையில் நடந்த முக்கியமான பகுதிகளை மட்டும் எழுதினேன்.

முருகனடியார்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி.

அடியார்க்கு அடியேன்
கிருபானந்தவாரி.

(முற்றும்)

# பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பணிகள் இன்றியமையாதவையாகும்

## வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா

(பருத்தித்துறை)

"பாடசாலைக் கல்விச் சமூகத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பணிகள் மிக இன்றியமையாதவையாகும்.

பாடசாலை அபிவிருத்தித்திட்டங்களில் கல்வித் திணைக்களத்துடன் ஒப்பந்தங்கள் செய்யப்படும்போது பாடசாலை அதிபரான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தலைவருடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் தவறாது கைச்சாத்திடவேண்டும். செயலாளராகப் பொருளாளர் கைச்சாத்திடமுடியாது"

மேற்கண்டவாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பாடசாலை அபிவிருத்தி மேம்பாடுகளில் பாடசாலை அபிவிருத்திச்சங்கங்கள் அதிக அக்கறை கொண்டுசெயற்படவேண்டும்என்று கல்வியமைச்சு எதிர்பார்க்கின்றது.

இதனாலேயே பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களில் 2/3பங்கு பெற்றோர்களும் 1/3 பங்கு ஆசிரியர்களும் உள்ளடக்கப்படவேண்டும் எனக் கல்வியமைச்சு சுற்றுநிருபமூலம் சகல அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

கல்வித் திணைக்களத்துடன் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அதிபரும் பொருளாளரும் மட்டும் கைச்சாத்திடுவது கல்வியமைச்சின் செயற்பாட்டிற்கே சட்டவிரோதமானது.

இது போன்ற நடவடிக்கைகளைக் கல்வித்திணைக்களம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது. இவை ஒழுங்கீனங்களையும் ஊழல்களையும் ஏற்படுத்தும் செயற்பாடுகளாகும். ஒப்பந்தங்கள் கைச்சாத்திடத் திணைக்களத்திற்கு வரும்போது பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளரையும் தவறாது அழைத்துவர வேண்டும் என அதிபர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்படுகின்றன. இதனை அதிபர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று சுனாமி அனர்த்த அழிவுகளுக்குட்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் பெருந்தொகையான நிதி உதவிகளை வழங்கி வருகின்றன. இவ் உதவிகள் உரியமுறையில் பயன்படுத்தப்பட்டு பாடசாலைகளின் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு மாணவர்களின் கல்வி மேம்பாடடைய பாடசாலை அபிவிருத்திச்சங்கங்கள் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கங்களின் தலைவர் செயலாளர் பொருளாளர்கள் தத்தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நன்குணர்ந்து ஒழுங்கான முறையில் சிறப்பாகச் செயற்படும் போதுதான் எமது எதிர்காலச் சந் ததியினரின் கல்வித்தரம் மேம்பாடடைந்து நாட்டிற்குகந்த பிரஜைகள் எதிர்காலத்தில் உருவாகுவார்கள். நாடும் சுபீட்சமடைய முடியும் என்றுள்ளது. (க.ந.)

# போட்டிப் பரீட்சை நாளை

(கொழும்பு)

இலங்கையின் நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் நாளை சனிக்கிழமை கொழும்பில் மாத்திரம் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் இடம்பெறவுள்ளதாக ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 7ஆம் திகதி இந்தப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நடாத்தப்படவிருந்தது. எனினும் அப்போது யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டிருந்தது.

இதனையடுத்து நாளை சனிக்கிழமை இந்தப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் இடம்பெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

திறமையின் அடிப்படையில் கிராமசேவை உத்தியோகத்தர்களை அதியுயர் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் மாத்திரம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (த-9)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கக் கோரிக்கை

வடக்கு-கிழக்கு நிலைமைகள் சீரடையும் வரை உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒத்திப் போடுமாறு பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிகோ இது தொடர்பில் கூறுகையில்,

வடக்கு-கிழக்கின் நிலைமைகள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்படாத நிலையில் நாடு முழுமைக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்துதல்என்பது இயலாத ஒன்று வடக்கு-கிழக்கில் தேர்தல் நடை பெற வேண்டுமானால் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒரு சுற்றுப் பேச்சு வார்த்தையாவது நடக்க வேண்டும்.

கடந்த காலங்களிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளன. மேலும் 2004ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய தேர்தல் நடத்தப்பட்டால் சட்டபூர்வமான நடவடிக்கையை நாம் மேற்கொள்வோம்.

ஆகவே 2005ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்கமைய உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றார். (து)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

## 31 மீள்பார்வை


'மனோகரா' படத்தில்...

இது மட்டுமில்லால் நான் ஒரு சில படங்களில் வில்லனாக நடித்துள்ளேன். 'துளிவிஷம்', 'கூண்டுக்கிளி' போன்ற படங்களில் கூட வில்லனாக நடித்துள்ளேன். கூண்டுக்கிளி படத்தில் என் அண்ணன் எம்.ஜி.ஆருடன் நடித்தேன் பொதுவாக நம் மக்கள் வில்லனாக நடிப்பது ஹீரோவாக நடிப்பது ஆகிய இரண்டையும் வித்தியாசமாகத்தான் பார்ப்பார்கள். ஏனென்றால் அது நமது நடிகர்கள் செய்த வேலை. ஹீரோவாக இருப்பவன் குடிக்கக் கூடாது. புகைப்பிடிக்கக் கூடாது.பெண்களைப் பார்க்கக்கூடாது. பெண்கள் தான் அவன் மேல் விழ வேண்டும் மேலும் அவன் அப்பா அம்மாவைக் காப்பாற்றுகிறவனாக இருக்கவேண்டும். தானதர்மம் அதிகம் செய்யவேண்டும்.

ஒழுக்கமுள்ளவனாக இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். இவற்றைச் சில நடிகர்கள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். உண்மையில் சிகரெட் பிடிப்பவன் அந்த பழக்கமே இல்லாதது மாதிரி நடிப்பான். குடிப்பழக்கமே உள்ளவன் அதைப்பற்றி அறியாவதவன் மாதிரி நடிப்பான். பெண்களுடன் அதிகம் பழகுபவன் அந்த விஷயமே தெரியாதது மாதிரி படங்களில் நடிப்பான். இதெல்லாம் மக்களுடைய எதிர்பார்ப்புகள் இதைப் பிற காலத்தில்தான், நான் தெரிந்து கொண்டேன்.


'கூண்டுக்கிளி' படத்தில் எம்.ஜி.ஆருடன்...

நிஜ வாழ்க்கையில் நடிகர்கள் பல கெட்ட பழக்கங்கள் இருந்தாலும் படங்களில் நல்லவன் போல் காட்டிக்கொண்டு அரசியலில் நுழைந்து மக்களுடைய மனதில் இடம்பிடிக்க வேண்டும் என்ற தத்துவம் எனக்கு அப்போது தெரியாது.என்னைப் பொறுத்தவரை வில்லனா, ஹீரோவா என்பது முக்கியமல்ல. நான் நடிகனா? என்பது தான் முக்கியம்.


### மீண்டும் மனோகரா

டி.எஸ்.என்: 1954இல் உங்கள் திரைப்பட வாழ்க்கையில் உங்கள் நாடக வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டதல்லவா? நீங்கள் மனோகரா படத்தில் மனோகரனாக நடித்தீர்கள். உங்களைச் சங்கிலியால் கட்டி இழுத்து வரும் காட்சி அப்பொழுது நீங்கள் பேசும் அனல் பறக்கும் தமிழ் வசனம் இவையெல்லாம் இன்றும் நினைவில் நிற்பவை. அந்தப் படத்தைப் பற்றிக் கூறுங்கள்?

சிவாஜி. எனக்கு மனோகரா பழக்கப்பட்ட நாடகம். ஏனென்றால் சின்னப்பிள்ளையில் மனோகரா நாடகத்தில் ராஜப்பிரியனாக நடித்துள்ளேன்.

அதில் ஹீரோயின் விஜியாக நடித்துள்ளேன். வஸந்தஸேனை பத்மாவதி ராஜபுருஷோத்தமன் மற்றும் மனோகரனாகவும் நடித்துள்ளேன். ஆகவே எனக்கு மனோகரா படம் புதிய அனுபவமாகத் தெரியவில்லை. நாடகத்தின் போது நான் சம்பந்தமுதலியாரின் வசனத்தைப் பேசினேன்.

அது படமாக எடுக்கும்போது கலைஞர் அவர்களின் வசனத்தைப் பேசினேன். அருமையான வசனங்கள் முன்பெல்லாம் பெரிய பெரிய வசனங்களாக இருக்குமல்லவா? அது வசனம் பேசும் காலம் நாடகக் கம்பெனியில் இருந்து சினிமாக் கம்பெனிக்கு வந்தவுடன் நல்ல தமிழில் வசனம் பேசுவதற்கு நான் ஒரு ஆள் மட்டுமே அப்போது இருந்தேன். அதனால் எல்லோரும் எனக்கென்று தனி வசனங்கள் எழுதினார்கள். மனோகராவில் வசனங்கள் மிகச் சிறப்பாக இருக்கும். இப்போது கூட ஞாபகத்திற்கு வருகிறது.


கலைஞர் மு.கருணாநிதியுடன்...

*'பொன்னும் மணியும்*
*மின்னும் வைரமும்*
*பூட்டி மகிழ்ந்து*
*கண்ணே! முத்தே!*
*தமிழ்ப் பண்ணே! என்றெல்லாம்*
*குலவிக்கொஞ்சி தங்கத்தினால் ஆன*
*கட்டிலிலே சந்தனத்தொட்டிலிலே'*

என்றெல்லாம் வசனம் எழுதிக்கொடுத்தார்கள். வசனம் என்பது எனக்கு பழக்கப்பட்டுப் போன விஷயம்.

டி.ஆர்.ராஜகுமாரி, கண்ணாம்பாள், காகாராதாகிருஷ்ணன், எஸ்.ஏ. நடராஜன் போன்ற பெரிய நடிகர் நடிகைகளுடன் நடித்த அந்தப் படம் அந்தக் காலத்தில் ஒரு மாபெரும் வெற்றிப் படமாகியது. இது தெலுங்கிலும் இந்தியிலும் கூட வெளிவந்தது.

நீண்ட வசனங்கள் பேசிய இந்தப் படத்தைப் பற்றிக் கூறும் போதுதான் எனக்கு இதற்குப் பிறகு நான் நடித்த ராஜா-ராணி என்ற படம் ஞாபகத்திற்கு வருகிறது. அந்தப் படத்தில் நான் சேரன் செங்குட்டுவனாக நடிக்கும்போது ஒரு பெரிய வசனம் பேசுவேன். அதுவும் கலைஞர் எழுதியது தான்.

அதில் ஒரு சின்னக்கதை அடங்கியிருக்கிறது. அதற்கு முன்னால் நானும் கலைஞர் அவர்களும் ஒரு நாடக்திதல் நடிக்கும்போது நான் செங்குட்டுவனாக நடித்தேன். அப்பொழுது

*'குடிசைதான் ஒரு புறத்தில் கூரியவாள்*
*வரிசைதான் அமைந்திருக்கும்*
*வையத்தைப் பிடிப்பதற்கும்*
*வம்பகை முடிப்பதற்கும்...'* என்று ஒரு வசனம் உண்டு. அதைப் பேசியிருக்கிறேன்.

கலைஞர் அவர்கள் அம்மையப்பன் என்று ஒரு படம் எடுத்தார்கள். (தொடரும்)

# செய்தித் தூளிகள்

## கலைஞர்களின் விபரங்கள் சேகரிப்பு

(பருத்தித்துறை)

யாழ்மாவட்ட கலை, கலாசாரப் பேரவையினால் வெளியிடப்பட வுள்ளகலைஞர்கள் விபரத்திரட்டில் இடம்பெற வேண்டிய கரவெட்டிப் பிரதேசத்தின் ஆக்கும் கலைக்கும் ஆற்றுகைக்கலைக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி கலை வடிவங்களில் தேர்ச்சி பெற்று சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சாதனை படைத்த கலைஞர்கள் பற்றிய விபரங்களை கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் திரட்டி வருகிறார்.

இச் சாதனை படைத்த கலைஞர்களில் இயற்கை ஏய்திய வெளிநாட்டில்உள்ள, உள்நாட்டில் உள்ள கலைஞர்களின் விபரங்களை சம்பந்தப்பட்டவர்கள் அல்லது உரித்துடையோர் கலாசார உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறும் பிரதேச செயலர் சத்தியசீலன் கேட்டுள்ளார். (க-52)

## அலங்கார உற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மேற்கு உலக்கைப் பழிற்சி வீரபத்திர சமேத பத்திரகாளி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும்.

பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை 9.00மணிக்கு தேர்த் திருவிழாவும் 8ஆம் திகதி செய்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க-39)

## கல்வி நிலையம் திறப்பு

(பொன்னாலை)

சுழிபுரம் பெரியபுலோ கிராமத்தில் புதிய மாலைநேர கல்வி நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் நிதியுதவியுடன் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக பெரியபுலோ சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

இக் கல்வி நிலையம் மூலம் அக் கிராமத்தில் கல்வி கற்று வரும் சிறுவர்கள் பாரிய நன்மை அடைய முடியும் என்று அப்பகுதி மக்கள் மகிழ்ச்சிதெரிவிக்கின்றனர். (த-49)

## இடமாற்றம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் சங்கீத ஆசிரியை திருமதி மங்களா சிறிதரன் பொலிகண்டி பலாலி அரசினர் தமிழ் கலைவன் பாடசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். (க-52)

## மீள்நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேசசபைச் செயலாளருக்கு வடக்குக் கிழக்கு மாகாணசபை மீள் நியமனம் வழங்கியுள்ளது.

இவர் தொடர்ந்தும் பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயலாளராகப் பணியாற்றுவார்.

பருத்தித்துறைப் பிரதேச சபை செயலாளர் சிதம்பரப்பிள்ளை பசுபதிசேவையில்இருந்து ஓய்வுபெறும் காலம் வந்ததையடுத்து மீள் நியமனத்திற்கு வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு விண்ணப்பித்திருந்தார்.

இவரது விண்ணப்பத்தைஏற்று பரீசிலனை செய்த வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மீள் நியமனத்திற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். சுமாபதிப்பிள்ளை இம் மீள்நியமன அனுமதி பற்றி அறிவித்துள்ளார்.

பசுபதி தொடர்ந்தும் பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். (க-52)

## காணி கொள்வனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபை தலைமை அலுவலகத்திற்கான நவீன கட்டடத்தை நிர்மாணிப்பதற்கென எட்டுப் பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சுனாமி புனரமைப்புதிட்டத்தின் கீழ் பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திற்கு ஒரு கோடி ரூபா செலவில் புதிய நவீன மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

புலோலி உபய கதிர்காமம் மந்திகை பிரதான வீதியில் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின்படி இக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச சபை தலைமை அலுவலகம், புலோலி உப அலுவலகம் என்பன ஒரே கட்டடத்தில் வசதிகள் அற்ற நிலையில் மந்திகை சந்தையுடனேயே தற்போது இயங்கி வருகின்றது.

புதிய நவீன கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேசசபை தொண்டமானாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான மிக நீண்ட பிரதேச பகுதியை நிர்வகித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-52)

## யாழ்ப்பாண- மாநகரசபை.

வியாபார அனுமதிப்பத்திரம்-2006
மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252.
பிரிவு.247ஏ, 247பி, 247சி

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட சகல வியாபார நிலையங்களும் தொழிற்சாலைகளும், தனியார் வைத்திய ஆலோசனை நிலையங்களும், தனியார் கல்வி நிலையங் களும், உயர்தொழில் நிறுவனங்கள் போன்ற வேறு தொழில் யாவும் எதிர்வரும் 28.02. 2006 ஆம் திகதிக்கு முன்பு தமது தொழில் சம்பந்தமான வெளியுரைகளை மாநகர அலுவல கத்தில் சமர்ப்பித்து 2006.03.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களையும் வரிகளையும் செலுத்தி உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொழில் மாற்றம் செய்பவர்கள் புதிய தொழில் ஆரம்பிப்பவர்கள் தொழில் நிலையங்களை மூடுபவர்கள் உடனுக்குடன் மாநகராட்சி மன்றத்திற்கு அறியத்தந்து ஒத்துழைப்பு வழங்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
24.01.2006.

சீ.வி.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/183)

# இந்தியக் குடியரசு தினவிழா கோலாகலமாக நடைபெற்றது


இந்தியாவின் 57ஆவது குடியரசு தினவிழா நாடு முழுவதும் நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சென்னை கடற்கரையில் நடந்த குடியரசு தின விழாவில் கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலா தேசிய



கொடியேற்றி வைத்தார்.

இதற்காக கடற்கரை சாலையில் காந்தி சிலை அருகில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. முதலமைச்சர் ஜெயலலிதா 7.51 மணிக்கு காரில் அங்கு வந்தார். அவருக்கு முன்னும் பின்னும் வெள்ளை நிற சீருடை அணிந்து மோட்டார் சைக்கிளில் பொலிஸார் அணிவகுத்து அழைத்து வந்தனர்.

அங்கு கூடியிருந்த பார்வையாளர்கள் பகுதியைச் சுற்றி வந்து அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தபடியே காரில் வந்து இறங்கினார். அவரை தலைமை செயலாளர் நாராயணன் வரவேற்றார்.



முதலமைச்சர் அங்கு நின்ற உயர் பொலிஸ் அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் வரவேற்றனர். காலை 7.45 மணிக்கு கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலா காரில் வந்து இறங்கினார்.

அவரை முதல் அமைச்சர் ஜெயலலிதா அணிவணக்கம் ஏற்கும் மேடை அருகில் வரவேற்றார். சரியாக காலை 8மணிக்கு தேசிய கொடியை கவர்னர் ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து அலங்கார வண்டிகளின் அணிவகுப்புகள் நடைபெற்றது. தர்மேந்தர்சிங் ஹொண்டா, துணைப் படைத் தளபதி சி.எஸ்.பானுபிரகாஷ் தலைமையில் இந்த அணிவகுப்பு நடந்தது.

இராணுவப் படை கப்டன் பிரசாந்த் போர்டி தலைமையில் படைப்பிரிவுகளும், அவில்தார் துரிசன் தலைமையில் இராணுவ கூட்டு குழல் அணியினரின் அணிவகுப்பு நடந்தது. அதன்பிறகு ஜே72 ரக டாங்கியும் 'அஜீத்' போர் விமானமும் அணிவகுத்து வந்தன.

இதைத் தொடர்ந்து கடற்படை வீரர்கள் அணிவகுத்து வந்தனர். ஒவ்வொரு படைப் பிரிவுகளும் அணிவகுத்து வந்தன. மத்திய ரிசர்வ் பொலிஸ்படை, ரெயில்வே பாதுகாப்பு படை, முன்னாள் இராணுவத்தினர் படைப் பிரிவு, ரெயில்வே பாதுகாப்பு படைப்பிரிவு, சென்னைமாநகர காவல்படை அணிவகுப்பு, மோப்பநாய்படை அணிவகுப்பு, கமாண்டோ படை, பெண்கள் சிறப்பு காவல்படை, நீலகிரி காவல்படை அணிவகுப்பு, தீயணைப்பு துறை, ஊர்காவல்படை, தேசிய மாணவர் படை, சாரணர்-சாரணீயர்களின் அணிவகுப்பும் நடைபெற்றது.

அந்த சமயத்தில் விமானப்படையைச் சேர்ந்த 4 விமானங்கள் தாழ்வாகப் பறந்து பார்வையாளர்களைக் கவர்ந்தது. இதைத் தொடர்ந்து முதல் அமைச்சர் ஜெயலலிதா வீரதீர செயல்புரிந்த 4 பேருக்கு அண்ணா பதக்கங்களை வழங்கிக் கௌரவித்தார்.

குடியரசு தின நிகழ்ச்சி மற்றும் அணிவகுப்புகளை கடற்கரை சாலையின் இருபுறமும் ஏராளமான பொதுமக்களும் மாணவ-மாணவிகளும் கூடி இருந்து கண்டு களித்தனர். அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட முக்கிய பிரமுகர்களும் குடியரசு தினவிழாவில் கலந்துகொண்டனர். விழா நடைபெற்ற காந்தி சிலை அருகே பலத்த பொலிஸ் கண்காணிப்பும் போடப்பட்டு இருந்தது.

சரியாக 9.25 மணிக்கு குடியரசு தின நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன. அதன் பிறகு கவர்னரை முதல் அமைச்சர் ஜெயலலிதா வழியனுப்பிவைத்து புறப்பட்டுச் சென்றார். (து)

தேர்தலில் போட்டியிட

# கருணாநிதிக்கு தடைவிதிக்க வேண்டும்! தேர்தல் அதிகாரியிடம் வக்கீல் மனு

(சென்னை)

சட்டசபை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசாமல் இருப்பதால் தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு தேர்தலில் போட்டியிட தடைவிதிக்க வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் வக்கீல்கள் மனு கொடுத்துள்ளனர்.



சென்னையைச் சேர்ந்த வக்கீல்கள் எஸ்.முத்துராஜ்(சேப்பாக்கம்), எம்.ராம கிருஷ்ணன், ஐ.சதீஷ், கே.அர்ஜுனன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் உள்ள தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா மற்றும் சபாநாயகர் காளிமுத்து ஆகியோரிடம் கொடுத்த மனுவில்,

சென்னை சேப்பாக்கம் தொகுதியின் எம்.எல்.ஏ யாக அந்தப் பகுதி மக்களால் கருணாநிதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆனால் சட்டசபைக்கு சென்று அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளில் அவர் கலந்துகொள்வதில்லை. அரசியல் காரணங்களுக்காக அங்கு வருவதை கருணாநிதி தவிர்க்கிறார்.

ஆனால் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருப்பதற்காக 60 நாட்களுக்கு ஒருமுறை சட்டசபைக்கு வந்து அங்குள்ள வருகைப் பதிவேட்டில் அவர் கையெழுத்து போட்டு செல்கிறார். இந்தியாவில் இப்படி உயர்மட்டத்தில் உள்ள பொது ஊழியர்கள் தங்கள் கையெழுத்தை மட்டும் போட்டுவிட்டு வேலை செய்யாமல் சென்றுவிட்டால் இந்தியாவின் நிலை என்னவாகும்?

சட்டசபையில் அனுமதியைப் பெறாமல் 60 நாட்கள் அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல் இருக்கும் எம்.எல்.ஏயின் பதவியை சட்டசபை இரத்துச் செய்யலாம் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 190(4)ஆம் பிரிவு கூறுகிறது. கடந்த நாலரை ஆண்டுகளாக சட்டசபை நிகழ்ச்சிகளில் கருணாநிதி கலந்துகொள்ளவில்லை.

எனவே இந்த சட்டத்தின் அடிப்படையில் கருணாநிதியின் எம்.எல்.ஏ பதவியை இரத்துச் செய்யவேண்டும். இதுவரை அவர் பெற்றுள்ள சம்பளம், படிகள், சலுகைகள் ஆகியவற்றை திரும்பப் பெறவேண்டும்.

மேலும், மற்ற பொறுப்பற்ற அரசியல்வாதிகளை எச்சரிக்கும் வகையில் வரும் தேர்தல்களில் போட்டியிட கருணாநிதிக்கு தடை விதிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (து)




இந்தியா வந்துள்ள பாக். வெளியுறவுச் செயலர் ரியாஸ் முகமதுகான் புதுடில்லியில் நேற்று முன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தார்.

# கடுமையான உழைப்பே நம்மை வழிநடத்தும் ஒளியாகும்

## சுதந்திர தின உரையில் அப்துல் கலாம்

நேர்மையான உழைப்பே நம்மை வழி நடத்திச் செல்லும் ஒழியாகும் என ஜனாதிபதி அப்துல் கலாம் தனது குடியரசு தின உரையில் குறிப்பிட்டுள்ளார். குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி அப்துல் கலாம் ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்ததாவது,




நமது நாட்டின் மிக முக்கியமான தேவைகள் இரண்டு. முதலாவது தேசிய இயக்கம் மற்றும் அதன் வளர்ச்சி. இரண்டாவது நமது வளர்ச்சியை பாதுகாப்பது, தனிப்பட்டவர்கள் மற்றும் மக்களின் வருவாய் ஈட்டும் திறனைத் தொடர்ந்து நிலைநிறுத்துவது. நான் அனைத்து மாநிலங்களுக்கும் சென்று பலருடன் உரையாற்றியுள்ளேன். இதன்மூலம் 2020 ஆம் ஆண்டை தொலைநோக்கு இலக்காக கொண்ட இயக்கம் உருவானது.

நமது நாட்டின் அறிவியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் உடனடியாக செயல்படுத்தக்கூடிய ஐந்து உடனடி திட்டங்கள் உள்ளன. அதி நுண் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சூரியஒளி, மின்சக்தி திறனை 14 சதவீதத்தில் இருந்து 45 சதவீதமாக உயர்த்த வேண்டும்.

பூகம்பத்தின் மூலம் ஏற்படும் பாதிப்புகளை முன்பே கண்டறிந்து தெரிவிக்க முன்னெச்சரிக்கை கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

மேகத்தின் அளவைக் கொண்டு எந்தப் பகுதியில் எவ்வளவு மழை பெய்யக்கூடும் என்பதை கணிப்பதற்கான புதிய ரேடார் கருவிகளை அமைக்கவேண்டும். அது நுண் உயிரி மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சுகாதார பாதுகாப்பு மின்னணு சாதனங்கள் மற்றும் நாட்டின் தேவைக்கேற்ப கருவிகளை உருவாக்க வேண்டும். எச்.ஐ.வி, எயிட்ஸ் பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்கும் சுகாதார பாதுகாப்புத் திட்டத்துக்கு உயர் முன்னுரிமை வழங்கவேண்டும். 2007ஆம் ஆண்டுக்கு முன் எச்.ஐ.வி நோய்க்கு சிறந்த மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

நமது நாட்டின் 25 வயதுக்கு கீழ் உள்ள 54 கோடி இளைஞர்களும் பார்லிமென்ட் உறுப்பினர்களின் பணியைப் பின்பற்றி சிறந்த தலைவர்களாக உருவாகும் நிலை வரவேண்டும். அரசியலிலும் வளர்ச்சி இலக்குகளிலும் நல்ல மாற்றத்தைக் கொண்டுவருவதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இளைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழவேண்டும்.

'சமூகமோ அரசியலோ அனைத்து முயற்சிகளுக்கும் அடிப்படை மனிதனின் நல்ல தன்மையே. ஒரு சட்டத்தை இயற்றி விடுவதாலே எந்த நாடும் சிறந்ததாக உயரமுடியாது. அந்த நாட்டில் உள்ள மனிதர்கள் சிறந்தவர்களாகவும் நல்லவர்களாகவும் இருப்பது முக்கியம்' என்ற சுவாமி விவேகானந்தரின் பிரபலமான கூற்றை நினைவு கூற விரும்புகிறேன்.

அனைவரும் வாய்மை, நேர்மை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை அன்றாட வாழ்விலும் கடைப்பிடிக்கவேண்டும். நேர்மையான உழைப்பே நம்மை வழி நடத்திச் செல்லும் ஒளியாகும் கடினமாக உழைத்தால் நாம் எல்லோரும் வளமடையலாம். சிறந்த எண்ணங்களைத் தாங்கி செயல்பாடுகளில் உயர்வோம். நேர்மையான வழிமுறைகள் நமக்குத் துணையாகலாம். இறையருளால் நாடு மென்மேலும் வளம் பெறும் என்றார். (து)

## இந்திய வலம்



பீகார் கவர்னர் பூட்டாசிங்கை பதவியிலிருந்து நீக்கும்படி கோரி ஜனாதிபதி அப்துல் கலாமை சந்தித்துவிட்டு வெளியே வருகின்றனர் பாரதிய ஜனதா தலைவர்கள் அத்வானி, ராஜ்நாத்சிங், சுஷ்மாசுவராஜ், மல்கோத்ரா உள்ளிட்டோர்.

மூடன் இறுதியில் செய்வதை அறிவாளி
ஆரம்பத்திலேயே செய்து விடுவான்.

-அப்துற் றஹீம்

வலம்புரி

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பாராட்டு

## ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை

(மன்னார்)

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்துக் கட்சிகளையும் இணைத்து செயற்படும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மன்னார் ஆயர் இராஜப்பு சோசப் ஆண்டகை வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அனைத்துக் கட்சிகளையும் இணைத்து தாங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் எமது பாராட்டுக்கள். எமது நாட்டின் இன்றைய நிலை கவலைக்குரியதாக இருக்கிறது. இது விடயத்தில் நாம் நடவடிக்கை எடுக்க தயங்கும் ஒவ்வொரு நிமிடமும் விலைமதிப்பற்ற மனித உயிர்கள் அழிக்கப்படுவதோடு எமது நாட்டு நிலைப்பாடும் மோசமாகிக் கொண்டே போகும்.

இந்த நேரத்தின் மிக முக்கியமான அழுகுரல் என்னவென்றால் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் மிக நுணுக்கமாக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்த உடன் செயற்பாடுகளில் இறங்க வேண்டும் என்பதாகும்.

இது எவ்வளவு கடினமானதாகவோ வேதனை மிக்கதாகவோ இருந்தாலும் முழுமையான சமாதானத்தை நோக்கி நகர்ந்து செல்ல இதுவே ஒரே வழியாகும்.

அடுத்து எனது தாழ்மையான அபிப்பிராயம் என்னவென்றால், சமாதானத்தை ஏற்படுத்துவது இந்த நாட்டு மக்களினது வேலை என்பதோடு அதே மக்களால் சமாதானத்தை முன்னுரிமைப்படுத்தும்படி கொடுக்கப்பட்ட பணியை அரசியல்வாதிகள் நிறைவு செய்வதாகும்.

இந்த வகையில் சமாதானத்தை ஏற்படுத்தும் பணி தற்போதைய அரசு பழைய அரசு விட்ட இடத்தில் இருந்து தொடரகடமைப்பட்டிருக்கிறது. அரசுகளின் வேறுபாடு சமாதானத்திற்கான அணு குமுறையில் வேறுபாடு கொண்டது என்று நினைப்பது தவறானதாகும். சமாதானம் என்பது இந்த நாட்டு மக்களால் மிக நீண்டகாலம் தேடப்படும் ஒரு பொது முயற்சியாக உள்ளது.

இந்தத் தேடுதல் முயற்சி முழு சமாதான முயற்சிக்கும் ஆபத்து விளைவிக்காத வகையில் பின்வாங்கப்பட முடியாதது.

முன்னுரிமைப்படுத்தப்படவேண்டிய விடயங்கள் பற்றி குழப்பம் ஏற்படும் என்கின்ற படியால் முதல் கூட்டத்தை எந்த இடத்தில் வைப்பது என்று தீர்மானிப்பதில் நேரத்தை வீணாக்கக்கூடாது என்பதும் எனது தாழ்மையான கருத்தாகும். இந்த நேரத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கிடையில் நம்பிக்கை ஏற்படுத்துவதே மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இப்பணிக்காக அழைக்கப்பட்ட நோர்வே நாட்டினரை பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும் அடிப்படைப்பணியை ஆற்ற அனுமதிப்பதே அர்த்தமுள்ளது என்றுள்ளது. (சு)

# ஜே.வி.பியை ஓரங்கட்டும் மகிந்தவின் காய்நகர்த்தல்

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலம் இன்றுவரை பாராளுமன்றத்தில் உறுதியாக இல்லை.

சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்புக்கு உடன்பட்ட பின்னர் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை ஜே.வி.பி விளக்கிக் கொண்டது. இதனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை பொது ஜனஜக்கிய முன்னணி இழந்தது.

ஆயினும் அரசாங்கத்துக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கவில்லை.

மீண்டும் ஒரு தடவை பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்கு நாடு தயாராகவில்லை என்ற காரணத்தை முன்வைத்து அர்சைக் கவிழ்க்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடாதெனக் கட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்குகெதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தால் அதற்கு ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்காமல் போகும் என்பதும், அவ்விதம் ஜே.வி.பி ஆதரவளிக்காது விடின் தமது நடவடிக்கை பிசுபிசுத்துப் போகும் என்பதனாலுமே ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரவில்லை.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மகிந்த ராஜபக்ஷவும் ஜே.வி.பியினரும் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் ஒரு புறம் இருக்க, தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமது உடன்படிக்கைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்தளவு தூரம் மதிப்பளிப்பார்-கடைப்பிடிப்பார் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை.

அப்படியானால் எந்த நம்பிக்கையில் ஜே.வி.பி மகிந்தவுடன் உடன்படிக்கை செய்து கொண்டதென்னும் கேள்வியெழலாம்.

அப்படியானதொரு கேள்வியின் நோக்கில் ஆராய்ந்தால் அதற்கு இருக்கக் கூடிய ஒரே விடயம் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் பாராளுமன்றப் பலமாகும். அதாவது ஜே.வி.பியின் ஆதரவில்லாமல் அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாது.

இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷ உடன்படிக்கையை மீறும் போது அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் ஜே.வி.பி ஈடுபடும். இதுவே அவர்களின் திட்டம்.

ஆனால், இதற்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கம் இழுப்பதில் மகிந்த தீவிரமாக உள்ளார்.

அதில் அவர் கண்டுவரும் வெற்றி ஜே.வி.பியின் திட்டத்திற்கு ஆபத்தாக அமைந்தாலும் அது பற்றி ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

# நல்ல இலக்கோடு செயற்பட்டு முன்னேற மாணவர்களுக்கு வழிகாட்டவேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ்

(நல்லூர்)

இன்றைய சூழலில் நல்ல இலக்கோடு செயற்பட்டு முன்னேற மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தின மத்திய மகாவித்தியாலய பவள விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் கூறினார்.

கடந்த 24ஆம் திகதி கனகரத்தினம் மத்திய மகாவித்தியால்யத்தில் அதிபர் கே. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற பவளவிழாவும் பரிசளிப்பு நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைாயற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், கல்வித்துறையில் செயற்திறன் மிக்க முன்னோடிப் பாடசாலையாக நீண்டகால வரலாற்றைக்கொண்டு திகழும் இவ் வித்தியாலயம் நாட்டுக்கு அரும்பணி ஆற்றிய பலரைத் தந்திருக்கிறது. அத்துடன் தெளிந்த சிந்தனைப் போக்குடன் அறிவியல், வணிகத்துறை, விளையாட்டுத் துறைகளில் மாணவர்களின் உயர்வுக்காக ஆசிரியர்கள், சேவைகளை வழங்கியுள்ளனர் என்றார்.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் அங்கு உரைநிகழ்த்துகையில், சிறப்பான வரலாற்றைக் கொண்ட இக்கல்லூரி இந்த மண்ணிற்கு உன்னதமானவர்களைத் தந்துள்ளது என்றார்.

தொடர்ந்து பவளவிழாவையொட்டி வெளியிடப்பட்ட கனகஜோதி மலரை யாழ். அரச அதிபர் கே.கணேஷிடம் இருந்து துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் நிகழ்வில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோரை துணைவேந்தர் மோகனதாஸ் விருது வழங்கிக் கௌரவித்தார். (க-134)

# தேடுதல்கள் தொடரும்; அரசாங்கம் அறிவிப்பு!

(கொழும்பு)

நாட்டு மக்களையும் பாதுகாப்புப் படையினரையும் காக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருப்பதனால் சில சிறு தொழிற்சங்கங்களின் தேவைக்கமைய தேடுதல் நடவடிக்கைகளைக் கைவிடப் போவதில்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு உதவிகளுடன் சிறுபிரிவினரைக் கொண்டியங்கும் இந்தத் தொழிற்சங்கங்கள் ஏனைய தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களையுமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளன. இதற்குப் பதிலளிக்கும் வகையில் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்திருக்கும் நேரத்திலும் படுகொலைகள் இடம்பெறுகின்றன.

இந்தத் தொழிற்சங்கங்கள் படுகொலைகளை நிறுத்துமாறு ஏன் விடுதலைப் புலிகளைக் கேட்பதில்லை? தொழிற்சங்கங்களின் வேண்டுகோள்களுக்கமைய தேசியப் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நிறுத்தப்போவது இல்லை என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள இராணுவ அதிகாரி ஒருவர்,

ஆயுதங்களை விடுதலைப் புலிகள் வைத்திருக்கையில் இந்தத் தொழிற்சங்கங்கள் ஏனைய குழுக்களின் ஆயுதங்களைக் களையுமாறு கூறுவது வேடிக்கையானது என்றார். மாற்றுக்குழுக்களைச்சேர்ந்த 68பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (கு)

# பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சர்வகட்சி மாநாடு இடம்பெறும்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சர்வகட்சி மாநாடு ஒன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் என்று அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வகையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரைநிகழ்த்துகையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக சமாதானப் பேச்சுகளுக்கான திகதிகள் நிர்ணயிக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களை வெளிப்படையாகவும், திறந்த அடிப்படையிலும் முன்னெடுத்துச் செல்வது ஜனாதிபதியின் நோக்கமாகும். இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதை நாட்டின் ஜனநாயக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதமுடியுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



இந்தப் பிரபஞ்சத்தின் சுக துக்கங்களைப் பற்றி யாருககுக் கவலை? இவற்றையெல்லாம் கடந்து துணிவுடன் செல்லுங்கள். பிரபஞ்சச் சட்ட திட்டங்களுக்கு அப்பால் விரையுங்கள். பிரபஞ்சம் முழுவதும் மறையட்டும். தனியே நில்லுங்கள். நான் உண்மை-அறிவு-இன்பம்! நானே அவன். நானே அவன்.

சுவாமி விவேகானந்தர்

# கச்சதீவு அருகே ஐவர் கைது

கச்சதீவில் சந்தேகத்துக்கிடமான படகில் பெருந்தொகையான வெடி பொருட்களையும் வெடிக்கவைக்கும் கருவிகளான டெட்டனேட்டர்களையும் அந்தப் படகில் பயணம்செய்த ஐவரை யும் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இரண்டு வகையான கருவிகள் அந்தப் படகில் இருந்துள்ளன. 16 பெட்டிகளில் ஒரு வகையும் மற்றைய 22 பெட்டிகளிலும் பொதியிடப்பட்ட நிலையில் சுமார் 65,500டெட்டனேட்டர்கள் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

# மரண அறிவித்தல்கள்



## திரு. விநாசித்தம்பி சோமசுந்தரம்

*(பிரபல தொழிலதிபர் கொட்டடி மரக்காலை, CITY HARDWARE CITY STEELS STANLEY ROAD, JAFFNA CITY TRANSPORT SERVICE, CENTRAL ROAD COLOMBO-12 பங்காளர்.S.அருணாச்சலம் செட்டியார் அன் சன்ஸ் 165, 5ஆம் குறுக்குத்தெரு கொழும்பு- 11)*

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது கொழும்பு 26/5 லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் வசித்தவருமாகிய பிரபல தொழிலதிபர்-விநாசித்தம்பி சோமசுந்தரம் 25.01.2006 இல் காலமானார்.

அன்னார் சிறிதேவியின்(நாகம்மா) அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தகௌரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், மனோகௌரி(கனடா), அமிர்தகௌரி(ஆசிரியை), ஜெயகௌரி (சங்கீத ஆசிரியை சைவப்பிரகாச வித்தியாலயம் வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வி, நீதிராஜா, சகி, சந்திரா, ரூபசாந்தன், யோகமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜானி (கண்ணம்மா), தினேஸ், திருஷா, கருஷன், சஞ்சயன், ஆதித்தன், ஆரணியன், அருண், பிரவீனா ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ் சென்றவர்களாகிய சிவபாக்கியம், ஆறுமுகம், காராளபிள்ளை, பசுபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் சின்னத்தங்கம் நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) மற்றும் சறோஜினி, இரத்தினம், இராசமணி, முத்தையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் 29.01.2006 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 8 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

No,26/5 Loures Road,
Bambalapitya,
Colombo.
T.P.2589701.

தகவல்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(149)



## திருமதி சின்னராசா சரஸ்வதி

நாச்சிமார் கோவிலடி, தலையாழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா சரஸ்வதி (25.01.2006) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சின்னராசா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற கனகசபாபதி, மகேஸ்வரி, மாசிலாமணி(U.K), புவனேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நடராசா, காலஞ் சென்ற கணேஸ், காலஞ் சென்ற நாகரத்தினம், பராசக்தி, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மகேசன், காலஞ்சென்ற கமலநாதன், கமலாதேவி(இந்தியா), விஜயலட்சுமி, சத்தியமூர்த்தி (U.K), சண்முகானந்தன் சத்தியசீலன், காலஞ்சென்ற குமரதாஸ், சத்தியலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெகதீஸ்வரி, காந்தகுமார், சிவபாதசுந்தரம், அன்னபூரணி, கலையரசி, சசிகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெகன், குகன், ஜெயந்தன், ஜெனுசா, சிந்துஜன், Dr. பிரகலாதன் பிருந்தாபன், மீராஜினி, திவாகினி, சுபாஜினி, பிரசாந், சாருஜா, காலஞ்சென்ற கம்சிகா, அபிநயா, நிருசிகா, மிதுஜா, பிருந்திகா, அர்பிந்தா, ஆரபிகா, ஆர்த்திகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(27.01.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
சி.மகேசன் (மகன்),
நியூ ராஜா கிறீம் ஹவுஸ்,
கிங்ஸ் எலெக்ரோனிக்,
யாழ்ப்பாணம்.

87/8, இராமநாதன் வீதி,
தலையாழி,
யாழ்ப்பாணம்.

(148)

# பொறுமையைச் சோதிக்க வேண்டாமென உயர் கல்வி மாணவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பொறுமையை சோதிக்கவேண்டாம் என்று இராணுவத்திற்கு யாழ்.உயர் கல்வி மாணவர்கள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்குக் கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவமும் அதனுடன் இணைந்து இயங்கும் ஒட்டுக் குழுக்களும் திட்டமிட்டரீதியில் மேற்கொண்டு வரும் படுகொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமே உள்ளது. பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்று அரசு கூறிக்கொண்டிருக்க மறுபுறம்சிங்கள இராணுவமும் அதன் ஒட்டுக் குழுக்களும் படுகொலைகளை மேற்கொண்டு வருவதிலிருந்து சிங்களப் பேரினவாதத்தின் உண்மைப் போக்கினை அறிந்து கொள்ளமுடிகின்றது.

எனவே இத்தகைய படுகொலைகளை உயர் கல்வி மாணவர்களாகிய நாம் கண்டிக்கின்றோம். தமிழ் மக்களின் பொறுமையைச் சோதிக்க வேண்டாம் என்று சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும் இராணுவத்தினருக்கும் எச்சரிக்கைவிடுகின்றோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4,39)

# அமைதிப் பேச்சுக்கு இணக்கம்...

இலங்கையில் மீண்டும் அமைதிப் பேச்சுக்கள் தொடங்குவதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்தின் பேச்சாளர் சென் மக்கொர்மக் வாசிங்டனில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் பெப்ரவரி மாதம் பேச்சுக்கள் நடத்துவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதை அமெரிக்க ஐக்கிய நாடுகள் வரவேற்கின்றது.

அமைதி முயற்சிகளில் சாதகமான முன்னேற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மை நாம் பாராட்டுகின்றோம்.

அமைதி முயற்சிகளில் நோர்வே மேற்கொள்ளும் அனுசரணைப் பணிகளுக்கு நாம் முழுமையாக ஆதரவளிக்கின்றோம்.

அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளான ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, யப்பான் ஆகிய நிரந்தர அமைதி உருவாக்க பேச்சு மேசைக்கு இரு தரப்பினரும் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தி வந்தன.

இலங்கை அமைதி முயற்சிகளில் அமெரிக்கா முழுமையாக தன்னை ஈடுபடுத்துக் கொள்கின்றது. பல ஆண்டுகளாக நீடித்து வரும் இனப்பிரச்சினை முடிபுக்கு வருவதை பார்க்கவே இலங்கையில் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் விரும்புகின்றார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

அமைதியை உருவாக்கவும் அந்த நாட்டின் நிலைத்தன்மை நீடிக்கவும் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### *யப்பான்*

போர்நிறுத்த உடன்படிக்கை சுமுகமாக அமுல் செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஆரம்பித்த புதிய முயற்சிகளை வரவேற்பதாக யப்பான் அரசு அறிவித்துள்ளது.

இது போன்ற முக்கிய மாற்றங்களை கொண்டு வருவதற்கு அனுசரணையாளர்களாகிய நோர்வே அரசின் பணியையும் வரவேற்பதாகவும் யப்பானிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் இலங்கைக்கான தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய முயற்சிகள் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் ஊட்டும் என்றும் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் யப்பான் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குமேற்கொள்ளப்படும் முன்னெடுப்புக்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதற்கு உறுதி பூண்டுள்ள தாகவும் யப்பானிய அரசின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### *இந்தியா*

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சுமூகமான ஒரு புரிந்துணர்வு நிலை உருவாகியிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இது ஜெனீவாவில் பேச்சுக்களை ஆரம்பிக்கப்பட்டதும் மென்மேலும் திருப்தியடையும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவ் தெரிவித்துள்ளார்.

வடக்குக்கு கிழக்குப் பிரச்சினைகளுக்கான சரியான தீர்வை உரிய பேச்சுவார்த்தை மூலமே எட்டமுடியும் என அவர் தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற குடியரசுத்தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரு தரப்பினரும் இணைந்து பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஆரம்பமாகும்.

நாம் அனைவரும் இந்த நாட்டின் அமைதிக்காகவும் அதனை முன்னெடுப்பவர்களுக்காகவும் செபிக்கவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (ச-39,4)

# இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மூளையில் ஏற்பட்ட கட்டி காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், சிகிச்சை பலனளிக்காமல் அங்கு மரணமானார். கோப்பாய் தெற்கு பரமேஸ்வரி அம்மன் வீதியைச் சேர்ந்த க.வைத்தியநாதன் (வயது-30) என்பவரே மரணமானவராவர். (இ

# அமைதிப் பேச்சுக்களில்...

காலம் ஓடிவிட்டன.

இத்தகைய அமைதி முயற்சிகளில் பொறுமையாகச் செயற்படுதல் இன்றுவரை முக்கியமானதாக இருக்கிறது. இனப்பிரச்சினையானது சில மாதங்களில் தீர்ந்துவிடக் கூடிய பிரச்சினை அல்ல.

இரு தரப்பினருடனான சந்திப்பு மகிழ்ச்சியளிக்கிறது. அவர்கள் தலைவர்கள் என்பதால் மட்டும் அல்ல; யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவது தொடர்பில் சந்தித்துப் பேச ஒப்புக்கொண்டமை தான் மகிழ்ச்சியளிக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரு தரப்பினரும் வன்முறைகளையும் படுகொலைகளையும் முடிபுக்கு கொண்டு வரும் வழிகளை ஏற்படுத்தலாம். அதுவே தீர்வுக்கான முன்னெடுப்பாகவும் அமையும். உண்மையில் அமைதி முயற்சிகளுக்கு உற்சாகம் அளிக்க கூடியதுதான். நாம் எந்தத் தரப்பையும் சமரசமாக சென்றுவிடுமாறு நாம் கேட்டுக்கொள்ளவில்லை.

இந்த அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்க சில சக்திகள் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய அபாயமும் உள்ளது. இருதரப்பினரும் இந்த வன்முறை சக்திகளை அனுமதிக்காமல் அமைதி முயற்சிகளை அவர்கள் தடம்புரளச் செய்யாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் தனது செவ்வியில் தெரிவித்தார். (ச-4,39)

# இராணுவத்...

புலிகள் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தாக்குத லுக்கு விடுதலைப்புலிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (ச-4)







## குளிரூட்டிய நவீன கார் வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத்தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
22,சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம்

T.P: 0777-903090
0777-246117
077-9172730




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.